கனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தமிழ்நிலத்தை மீட்பீர்!

என்றெழுவும் தமிழர்படை? என்றெமது தோள்புடைக்கும்?
இளைஞர்களும் பெண்டிர்களும் எழுந்து வந்தே
ஒன்றிணைவ தெந்தநன்னாள்? உயர்நிலத்தை மீட்பதெந்நாள்?
உலகம்வாழ் தமிழரெலாம் ஒன்றாய்க் கூடிக்
குன்றனைய பெரும்புகழைக் குவிப்பதெந்நாள்? வாழ்வதெந்நாள்?
குவலயத்தார் காண்பதெந்நாள்? –என்றே என்றே
சென்றபல நூற்றாண்டாய்க் கேட்கின்ற தமிழர்களே!
செருமுகத்துக் கெழுந்திடுவீர் இன்றே! இன்றே!

நனவெடுத்த பெருநிகழ்ச்சி! நடந்திடுமெய் வரலாறு!
நடையெடுத்த பெரும்படையின் விடுதலைப்பண்!
தினவெடுத்த பொருதோளீர்! திறலெடுத்த விறல்மனத்தீர்!
தீந்தமிழின் பகையெங்கே எங்கே என்று
கனவெடுத்த கதையிலெலாம் உரையெடுத்த காளையரீர்!
களிப்பெடுத்த செய்தியிது கேட்பீர்! கேட்பீர்!
தினவெடுத்த கைச்சோற்றை வீசிவிட்டுச் செருமுனைக்குத்
திரண்டுவந்தே தமிழ்நிலத்தை மீட்பீர்! மீட்பீர்!

சுவடி: 9. ஓலை: 12. விலை: 75 காசு.

நமக்கு வந்த மடல்கள்.

0: 302: 'தமிழகப் பிரிவினை தேவையே' என்ற தலைப்புக் கட்டுரையைப் படித்தேன். படிக்கப் படிக்கத் தோள்கள் புடைத்தன. நெஞ்சு கொதித்தது. செங்குருதி உணர்ச்சி மேலீட்டால் வெப்பம் மிகுந்தது. நான் இன்றே அணியம்! விடுதலைக்கு உயிர் கொடுக்கவும் அதனால் வரும் பல்லாற்றான துன்பங்களையும் இழப்புகளையும் ஏற்கவும் அணியமாயுள்ளேன். விடுதலைப் படையைத் துவக்குங்கள். என் போன்ற ஆயிரமாயிரங் காளையர்கள் அடிமைத்தளையறுக்க எழுச்சி கொண்டெழுவர். இது வெறும் வாய்மொழியன்று; என் அடிமனத்தி லிருந்து எழுந்திட்ட மெய்க்கூற்று. விடுதலைத் தானையில் பங்கு கொள்வேன் என்பதைச் செங்குருதியால் கையொப்பமிட்டு எழுதித்தர அணியமாயுள்ளேன். வேறெந்தத் தலைவரையும் நாங்கள் நம்ப வில்லை. கேட்கட்டும் விடுதலை முழக்கம்!

—கருமலைத் தமிழாழன், தருமபுரி-2.

0: 312: "தமிழகப் பிரிவினை தேவையே," – என் குருதியைக் கொப்பளிக்க வைத்து விட்டது. இன்றோ நாளையோ அல்லது இன்னும் சில ஆண்டுகளுக்குள்ளோ, நடுவண் அரசை முறியடித்துத் தமிழகம் தனியே பிரியத்தான் போகிறது. தமிழ் விண் முட்டு மள விற்குக் கழகக்காலம் பெற்ற புகழைப் பெறத்தான் போகின்றது.

—அ. கதிரேசன், மேலூர்.

0: 313: மவுலானா பசானியின், முசுபீர் இரகிமானது ஆட்சி யில் அரசியல் கட்சிக்காரர்களை - குமுகாயப் பகைவர்களைக் கண்டிக் கும் போர்க்குரலை நோக்குக! முறையான எழுச்சியைப் பெற்ற வங்க தேசத்தில் 'புல்லுருவிகள்' உண்டென்க. அவற்றைக் களைந்தெறிய அதற்கு வலுவுண்டு. தங்களைப் போன்ற தனியழுத்தக் காரர்களை வைத்து எப்படி அண்ணா தமிழ்நாடு விடுதலை பெறும்? தாங்கள் விரும்பும் விடுதலை, வெறும் எல்லைக் கோடுகளைப் புதிதாகத் தேசப் படத்தில் வரைந்து விடுவதோடு முடியும் எனில், இந்தியத் துணைக் கண்டப் படத்தில் தமிழ் நாடென்று தாங்கள் கருதும் இடமெல்லாம் அழுத்தமான கரிக்கோட்டை இழுத்து மகிழ்ந்து கொள்க!

—பறம்பை அறிவன், பறம்புக்குடி.

0: 314: தென்மொழி, சுவடி 9 ஓலை 11 – இதழின் முகப்பில் கோவை அறிவியல் முனைவர் கோ. துரைசாமி அவர்கள் தென் மொழிக்கு விடுத்திருந்த மடலினைக் கண்டேன். தமிழர் குமுகாயத்தை, அறிஞர் அவர்கள் தனித்தமிழ் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை இனியும் ஓர் ஐந்தாண்டுகளுக்குத் தள்ளிவைக்க எதனை அடிப்படை யாகக் கொண்டு வேண்டுகின்றார் என்று நமக்கு விளங்கவில்லை. இனியும் ஐந்தாண்டுகளுக்குள் நம் கோரிக்கைகள் எவ்வண்ணம் நிறைவேற்றப்படும் என்று அவர் விளக்கவில்லை. உரிமை என்பது நாமே எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. இந்திய அரசு நம் உரிமைகளை மனங்கனிந்து தூக்கித் தந்துவிடும் என்று அவர் கருதுகின்றாரா? கையடக்கத்தில் கணக்கிடும் பொறியினைக் கண்டு பிடித்த அரும் பெருமையினைக் கண்டும் காணாதவர் போல் மாற்றான் தாய் மனப்பான்மையினைக் காட்டும் இந்திய அரசினை இனியும் அவர் நம்புகின்றாரா? அவர்தம் பெருமையினை அமெரிக்கர்களால் மட்டுந்

[தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க]



தென்மொழி
இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 9: ஓலை: 12.

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

மீனம் தி. பி. உ௦௦௩ - (மார்ச்சு-ஏப்.- 1972.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

நேரம் வந்து விட்டது! படைமுகத்துக்கு வாருங்கள்!!

என்னைப் பற்றி எண்ணிப் பார்க்க எனக்கு எவ்வளவு உரிமை உண்டோ, அப்படியே என் நாட்டைப் பற்றி – என் இனத்தைப் பற்றி – என் மொழியைப் பற்றி எண்ணிப் பார்க்கவும், கருத்தறிவிக்கவும் எனக்கு முழு உரிமை உண்டு. இந்த இயற்கை உணர்வின் அடிப்படையிலேயே பிறரையும் எண்ணிப் பார்க்கின்றேன். என்போல் பிறரும் அப்படி எண்ணிப் பார்த்துக் கொண்டிருப்பர் என்பதையும் உணர்கின்றேன். அவ்வாறு எண்ணிப் பார்த்துக் கூறும் அவர்களின் கருத்துகளிலும் உண்மை இருக்கவே செய்யும் என்பதையும் கூட என்னால் அறிந்து கொள்ள முடியும். ஆனால் இவ்வாறு ஒவ்வொருவரும் தம்மளவில் தாமே எண்ணிப் பார்க்கும் இயல் முறையை விடுத்து, என்னைப் பற்றிப் பிறரும், பிறரைப் பற்றி நானும் எண்ணுகின்ற முறையில் எல்லாமே இயற்கைக்குப் பொருத்தமாக இருந்து விடும் என்று எவரும் கூறிவிட

முடியாது. நாட்டைப் பற்றிய செய்தியிலும் மொழியைப் பற்றிய செய்தியிலும் இனத்தைப் பற்றிய செய்தியிலும் கூட இந்த உண்மைகளைத்தான் மாந்தன் கடைப் பிடித்தாக வேண்டும். அல்லாக்கால் குழப்பங்கள் மிஞ்சும்; ஒன்றுக் கொன்று போராட்டங்கள் மிகும்; ஒன்றால் ஒன்றுக்கு நேரும் அழிவுகள் தவிர்க்க முடியாதன வாகி விடும்.

நான் மொழியால் தமிழன்; எனவே இனத்தாலும் தமிழன்; இன்னுஞ் சொன்னால் நான் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலத்தாலும் தமிழன். இப்படிப்பட்ட நான் எனக்காக இயற்கை அமைத்துக் கொடுத்த வாழ்வியல் உரிமைகளை எண்ணிப் பார்ப்பதிலும், அவற்றைத் தேடிப் பெறுவதிலும், அவை கிடைக்காமற் போகுமிடத்து அவற்றிற்காகப் போராடுவதிலும் என்னைப் பிழையென்று சொல்ல எவருக்கும் உரிமையில்லை. மாந்தன் வகுத்துக் கொண்ட உலகியல் சட்டங்கள் எல்லாமே ஓரினத்துக்காக ஓரினத்தாரே வகுத்துக் கொண்டதில்லை. ஓரினத்தை அடிப்படுத்தி ஆள முயன்ற பிறிதோர் இனம் அமைத்துக் கொடுத்தவையாகத்தான் பெரும்பாலும் காணப் பெறுகின்றன. மாந்தர் யாவரும் ஒரே இனத்தவரே என்பதினும் ஒரே உலகத்தவர் என்பதில்தான் பசையிருக்கின்றது. அவ்வாறு தருக்கத்திற்காகவேனும் உலக மக்கள் யாவரும் ஒன்றென்று கருதிக் கொள்ள வேண்டும் என்பதாகக் கூறப் பெறுமானால், அப்படிக் கூறுபவன் என் நம்பிக்கைக்கு முற்றும் உகந்தவனாக இருக்க வேண்டும். அப்படிப் பட்டவனுக்கு மொழி, இனம், நாடு என்பதாக ஒன்றுமே இருக்கக் கூடாது. அவன் கால் நடையை எந்த எல்லைச் சுவரும் தடுத்து நிறுத்திவிடக் கூடாது. அவன் பேசுகின்ற மொழி நான் பேசுகின்ற மொழியாக இருக்க வேண்டும். அவன் என்போல் உண்ண வேண்டும்; என்போல் உடுக்க வேண்டும்; என்போல் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். என்னைக் கீழாக வைத்துத் தன்னை மேலாக வைத்துக் கொண்டிருப்பவனின் அறிவுரையை என்றும் நான் ஏற்றுக் கொள்ளுவதற்கில்லை. எனவே அப்படிப் பட்ட ஒருவன் இவ்வுலகத்தில் எந்த ஊழியிலும் வாழ்ந்து விட முடியாது. உலகம் முழுவதுமே வேற்றுமையில் ஒற்றுமை காண்பதாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றதே தவிர, வேற்றுமையற்ற ஒற்றுமையுடன் திகழ்வதாக எவரும் கூற முடியாது. ஆனால் என்மொழி, என்இனம், என்நாடு என்பதாகக் கூறப் பெறும் உள்ளுணர்வை எவரும் எளிதில் சுட்டுப் பொசுக்கி விட முடியாது. வேண்டுமானால் ஒரு பொழுதில் தூங்கி ஒரு பொழுதில் விழித்துக் கொள்வதைப் போல் ஒரு கால வட்டத்தில், ஒரு நில எல்லைக்குள் அதைச் செயற்படுத்தி, அடுத்த கால வட்டத்தில், அடுத்த நில எல்லைக்குள் அதைத் தகர்த்துவிட வேண்டியதாக இருக்கும். இவ்வியற்கை அமைதிக்குள்தான் உயிரினத்தின் உரிமை உணர்வும் விடுதலை உணர்வும் அடக்கப் பெற்றுக் கிடக்கின்றன.

இவ் வடிப்படையிலேயே தென்மொழி தன் மொழி உரிமையையும் இன உரிமையையும் கடந்த பதினான்கு ஆண்டுக் காலமாக முழக்கி வருகின்றது. இக் கடுமையான தொடர்ந்த முயற்சியால் விளைந்த விளைவுகள் எத்தனையோ உள. மொழியைப் பொறுத்த

வரையில் இதன் முழக்கங்கள் எவ்வகையான போராட்டமுமின்றி ஓரளவு வெற்றி பெற்று வருகின்றன என்று கூறி மகிழலாம். ஆனுல் இனத்தைப் பொறுத்த அளவில் இதன் நோக்கம் ஓர் இம்மியளவும் நிறைவேறியதாகக் கூற முடியாது. ஏனெனில் தமிழனின் வரலாறு அத்துணை இறுக்கம் வாய்ந்த ஓர் அடிமை வரலாருக ஆக்கப் பெற்றுக் கிடக்கின்றது. இவ் விறுக்கத்தை இலகச் செய்ய எடுத்துக் கொண்ட முயற்சிகள் பல. அவ்வாறு எடுத்துக் கொண்ட தலைவர்கள் பலர். இன்னும் அத்தகைய முயற்சி நடந்து கொண்டே இருக்கின்றது. இவ் விடத்தில் ஒன்றை மறந்து விடக் கூடாது. தமிழனின் வரலாறு பிற நாட்டவனின் வரலாற்றினின்று வேறுபட்டது. பிறநாட்டவன் ஏதோ ஓர் இனத்தானிடம் ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத்தான் அடிமைப் பட்டுக் கிடந்திருப்பான். ஆனுல் தமிழனின் அடிமை வரலாறு ஏறத்தாழ மூவாயிரமாண்டுத் தொடர்கதை. இவனின் ஆண்டைகள் பல பேர். ஒவ்வோர் இனத்தானிடமும் இவன் மாறி மாறித் தொழும்பு வேலைகள் செய்திருக்கின்ருன். இக்கால் இவனுக்கு ஆண்டையாக வந்து அமர்ந்தவன் வடநாட்டான்; அதிலும் ஆரியப் பார்ப்பான். இவனிடத்திலிருந்து இவன் தன்னை விடுவித்துக் கொள்வது அவ் வளவு எளியதன்று. சட்டத்தாலும் அதிகார நெருக்கத்தாலும் பொருளியல் முட்டுப் பாட்டாலும் இவன் அடிமைத்தனம் மூச்சு முட்டக் கிடக்கின்றது. இவன் தன்னைத்தானே அடிமைப் படுத்திக் கொண்டு கிடக்கின்ற நிலைகள் வேறு. அவை இவனை என்றும் உயர்த்திக் கொள்ளாதபடி அழுத்திக் கொண்டுள்ளன. இத்தனைக்கும் மீறி இவனை அவற்றினின்று விடுவிக்கும் ஒரு பேராற்றல் வாய்ந்த ஒருவனை – எந்த ஆற்றலாலும் கட்டுப் படுத்த முடியாத ஒருவனை – எத்தகைய கொடுமைகளுக்கும் ஏச்சுப் பேச்சுகளுக்கும் அஞ்சாத – அசையாத ஒருவனை – எவ்வகையான பற்றுப் பாசங்களுக்கும் அடிமைப் படாத ஒருவனை – எத்தகைய அகப்புறப் பகையுணர்வுகளுக்கும் சலிப்படையாத ஒருவனை–தமிழகம் எதிர் நோக்கிக் கொண்டுள்ளது. அவனே தமிழக அடிமை வரலாற்றிற்கு முற்றுப்புள்ளி இட வேண்டியவனுவான். ஆனுலும் அத்தகைய ஒருவனும் நம்முடைய வயிற்றினின்றுதான் தோன்றித் தீர வேண்டும். எனவே இன்றைக்குப் புடைத்தெழும் நம் நாடி நரம்புகளின் வேகம் நாளைக்கு அப்படிப் பட்ட ஒருவனைச் சமைத்துக் கொடுக்காதா என்று எண்ணி நான் அங்காந்து அலமந்து கிடக்கின்றேன் அதன் முடிவாகவே இவ்வளவு நாட்கள் என் எண்ணங்கள் யாருக்கும் கட்டுப் படாமல் வெடித்துச் சிதறின. பொங்கிப் புடை நிரம்பின. ஆனுல் எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி எண்ணத்திலும் எழுத்திலும் உணர்ச்சிகளை ஓட விடுவது? எனவே, இறுதியாக ஒரு முயற்சி.

வரும் சூன் மாதம் 10, 11-ஆம் பக்கல்களில் திருச்சித் தேவர் மன்றத்தில் ஒரு மாநாடு நடைபெறும், என்னைப் போல் எண்ணங்கொண்ட –அல்லது என் எண்ணத்தையே எளிது என்று கருதும்படியான ஓர் உள்ளம்–அல்லது உள்ளங்கள் எத்தனையோ இருக்கலாம். அவற்றிற்குப் போதிய துணையில்லாமலும் இருக்கலாம். அவற்றை யெல்லாம் ஒன்று கூட்டி ஒரு முடிவு காண்பதில் பிழையென்ன என்று எண்ணிக் கூட்டப் பெறுவது இம் மாநாடு. முன்பொரு முறை இப்படியொரு சிறு முயற்சி நடந்தது: ஆனுல் மறைமுகமாக –எவருக்கும் தெரியாத முறை

யில் நடந்து முடிந்த அம் முயற்சி அப்பொழுதைய நிலையில் ஒரு பட்டறிவை எனக்குத் தந்தது. அதன் அடிப்படையில் அம் முனைப்பை இவ்விடைக் காலமெல்லாம் ஆறப் போட்டேன். அதற்குள் என்னை எனக்கு நேரெதிராகக் கருதிக் கொண்டவர் சிலர்; பயனற்றவன் என்று ஏகடியம் பேசியவர் சிலர்; வெறும் வாய்ச் சொல்லில் வீரன் என்று ஏளனம் செய்தவர் சிலர்; உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு மக்களை ஏமாற்றி வாழ்கின்றவன் என்று குற்றம் சாட்டியவர் சிலர்; பெருந்தன்மையான திருடன்—தகவிலாதவன் என்று ஏசி வக்கணை பேசியவர் சிலர். இருப்பினும் என்வேலை தொடர்ந்தது. என்னுல் ஏதோ ஒன்று நடைபெற வேண்டும் என்று மட்டும் என் உள்ளுணர்வு அடிக்கடி கூறி வந்தது. அதைச் செயற்படுத்திப் பார்த்து விடத் துடித்தேன். ஆனால் என் மன உணர்வுக்குத் தகுந்த வகையில் நான் நெருங்குகின்ற சிக்கல்களைத் தீர்த்துக் கொடுக்க முன்வருவோர் எவரும் என் கண்களில் படவில்லை: தமிழகத்துத் தலைவர்களை யெல்லாம் தனித்தனியாக எண்ணிப் பார்த்தேன். வல்லடிமைப் பட்டுக் கிடக்கும் இத் தமிழகத்தை விடுவிக்கும் ஒருவர்க்கு என்னென்ன திறமை தகுதி இருக்க வேண்டும் என்று என்மன இலக்கணம் சொல்கின்றதோ அதற்குப் பொருத்தமான ஒருவரைத்தேடிப் பார்த்தேன். எல்லாரும் ஏதோ ஒரு வகையில் மக்களையும் தங்களையும் ஒட்டு மொத்தமாக ஏமாற்றிக் கொண்டு செல்பவர்களாகவே எனக்குப் பட்டனர். மக்களை எண்ணுபவர் மொழியைப் பற்றிக் கவலையில்லாதவராக இருக்கின்றார். மொழியைப் பற்றி நினைப்பவர் மக்களைப் பற்றிக் கருத்தில்லாதவராக இருக்கின்றார். இரண்டைப் பற்றியும் இணைத்து நினைப்பவர் பதவிக்காகத் தன்னைக் காவு கொடுத்துக் கொள்பவராக இருக்கின்றார். மூன்றிலும் தன்னை நெறிப் படுத்தி கொண்டவர் செல்வ நாட்டம் உடையவராக மக்களை ஏமாற்றிப்பணம் பண்ணிக் கொண்டு வாழ்கின்றார். இப்படி எல்லாரும் ஏதோ ஒரு வகையில் அல்லது சிலவகையில் உயர்ந்தும், பிறிதொன்றில் அல்லது பலவகையில் தாழ்ந்துமே என் கண்களில் படுகின்றனர். இனி, என்னைப் பொறுத்தவகையிலும் இத்தகைய ஏற்றத்தாழ்வுகளும் இருக்கத்தானே செய்யும் என்று நானே என்னைக் கேட்காமலில்லை. ஏற்றத் தாழ்வுகள் என்பன பலவகைப் பட்டன. என் மூக்கு நீளமாக இருக்கலாம். அதனால் என் பார்வை கோளாறு உள்ளதாகக் கூற முடியாது. என் நாக்கு நீளமென்று சிலர் கூறலாம். அதனால் என் கருத்தில் கூனல் விழுந்து விட்டது என்று எவரும் கூறிவிட முடியாது. இதுவரை எவரையும் எதற்காகவும் நான் வஞ்சித்ததில்லை; எவர்க்காகவும் எதற்காகவும் நான் என் கருத்தை மாற்றிக் கொண்டதில்லை. முன்னொன்று பேசி அதனைத் தவறு என்று உணர்ந்ததாக இதுவரை எனக்கு நினைவில்லை. அவ்வாறு உணரும் பொழுது அதைத் திருத்திக் கொள்ளவும் நான் அணியமாகவே இருக்கின்றேன். அன்றிலிருந்து இன்றுவரை என் குணங்கள் மாறுபட்டதில்லை. எதற்காகவும் என்னை நான் பணித்துக் கொண்டதில்லை. கட்டுப்படுத்திக் கொண்டவனும் இல்லை. பதவியையும் செல்வத்தையும் தானே என் காலில் வந்து ஒட்டிக்கொள்ளும் தூசைவிடக் கீழானவையாகவே என்மனம் நினைக்கின்றது பணம் என் வினைபடு கருவி; வழிபடுகருவியன்று.

என்னை என்றும் தலைவன் என்ற சொல்லுக்கு அணிமைப் படுத்திக் கொண்டதே இல்லை. என்னை விட, இங்குள்ள யாவரையும் விட ஒரு பேராற்றல் இவ்வுலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பதாக நான் என்று மெய்யறிவால் கண்டு கொண்டேனோ, அன்றிலிருந்தே என்னை ஒரு கருவிப் பொருளாகக் கருதிக் கொண்டிருக்கின்றேனே யன்றி, ஒரு கருத்தா – அஃதாவது ஒரு தலைமைப் – பொருளாக என்னை ஒரு நொடிப் பொழுதேனும் நினைத்துப் பார்த்ததே இல்லை. என்னை அப்படிக் கூறுபவர்களைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கு அப்படியொரு தலைவன் தேவையாக இருக்கின்றது போலும் என்று கருதிக் கொண்டு இருக்கின்றேனே தவிர, என்னையே அவர்களின் விளிப் பொருளுக்கு உகந்தவனாகக் கருதிக் கொள்ளவில்லை. இவ்வகையில் எனக்கு நேர்மாறான பொருளைக் கற்பித்துக் கூறிக் கொண்டிருப்பவர்கள் மேல் எனக்கு அவர்களின் அறியாமையைப் பற்றி இரக்கமே ஏற்பட்டுள்ளது.

எனவே, எதைப்பற்றியுமே எண்ணிச் செருக்குறாத நினைவுடன், தமிழர்களின் இயற்கை மெய்ப்பாட்டியலுக்கு மாறுபடாத விடுதலை நோக்குடன், ஒரு மாநாட்டைத் திருச்சியில் கூட்டியுள்ளேன். அது முழுக்க முழுக்க விடுதலை மாநாடுதான். ஆனால் அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவுவதற்காகத் "தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடு" என்று பெயர் கொடுத்துள்ளேன். அவர்களின் கண்களுக்கு இப் பெயர் மட்டும் தெரிந்து இதன் நோக்கம் தப்ப வேண்டும் என்று நான் எண்ணியது, இம் மாநாட்டிற்குக் கிடைக்க வேண்டிய எல்லாவகை இசைவுகளும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான். (இப்படி வெளிப்படையாக எழுதுவதை அவர்கள் படித்துத் தெரிந்து கொள்ள மாட்டார்களா என்பதை நான் எண்ணாமல் இல்லை. அவர்கள் தங்களைப் பற்றிய கருத்துரைகளில் கவனம் செலுத்துவதில்லை என்பதை நான் நமக்கு ஆக்கமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளேன்; அவ்வளவுதான்) எப்படியாவது மாநாடு நடக்க வேண்டும்; நாமெல்லாம் ஒன்று கூட வேண்டும்; மனம் விட்டுப் பேச வேண்டும்; நம் உரிமைகளை நாம் போராடிப் பெற வேண்டும் என்பவைதாம் என் உயிர் நோக்கம். மாநாட்டிற்குத் தலைவராக ஒருவரையும் அமர்த்த வில்லை. வரப் போகும் அன்பர்களில் ஒருவர் அங்கேயே தலைவராக அமர்த்தப் பெறுவர். மாநாட்டின் அறிக்கை வேறு பக்கங்களில் அச்சாகியுள்ளது. இம் மாநாடு உ. த. க. மாநாடு அன்று. அதற்கு எதிரானதும் அன்று. விடுதலை நோக்கம் அதில் இணையாமையால் இப்படித் தனி மாநாடாக இதை நடத்த வேண்டியுள்ளது.

மற்றப்படி தமிழகத்தின் எல்லாக் கட்சித் தலைவர்களுக்குமே மாநாட்டின் அழைப்பு அச்சிட்டு விடுக்கப் பெறும். என் அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரிய சிலரை மட்டும் மாநாட்டுச் செயற்குழு உறுப்பினர்களாக, அவர்களைக் கேளாமலேயே, தெரிந்தெடுத்துள்ளேன். விருப்பமில்லையானால் அவர்கள் தங்களுக்குத் தந்த பொறுப்பினின்று விலகிக் கொள்வதாக எனக்கு எழுதலாம். அவற்றை அடுத்த இதழில் அறிவித்து விடுவேன். மாநாட்டுத் தொடர்புடைய பிற செய்திகளைப் பற்றி அடுத்த இதழிலும் எழுதுவேன். நான் உங்களைத் தலைவணங்கி

தமிழ்நிலத்தை விடுவிப்போம்!

தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடு!

(அஃதாவது விடுதலை மாநாடு)

பேரன்புடையீர்!

வணக்கம். ஆண்டுகொண்டிருந்த நிலைமாறி மாற்றாரின் அடிமைச் சகதியில் சிக்கிக் கடந்த மூவாயிரமாண்டுகளாகப் பல்லாற்றானும் அல்லலுறும் தமிழ்ப் பேரினத்தை விடுவிக்கும் முயற்சியின் இறுதிக் கட்டமாக வருகிற 10, 11—6—1972 (விடைத் திங்கள் 28, 29) காரி, ஞாயிறு இரு நாட்களிலும் முறையே தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டுக் குழுகாய, அரசியல் மாநாடுகள் திருச்சிராப்பள்ளித் தேவர் மன்றத்தில் நடைபெற விருக்கின்றன.

தமிழ், தமிழக, தமிழின விடுதலைப் புரட்சிக்கு வித்திடும் தீர்மானங்களை நிறைவேற்றவும், தொடர்ந்து வினையாற்றவும் தமிழின எழுச்சியில் நாட்டங் கொண்ட முன்னணித் தலைவர்களும் புலவர் பெருமக்களும், இளந்தலை முறையினரும், ஒருமித்து முனைந்து ஏற்பாடு செய்துள்ள இம் மாநாட்டில் தாங்களும் வந்து கலந்து கொண்டு ஊக்குவிக்க வேண்டுகின்றோம்.

முதல் நாள் இரவில் வெங்காளூர்த் தன்னுரிமை நாடக மன்றத்தாரின் 'எந்நாளோ' என்னும் கொள்கை முழக்க நாடகம் நடைபெறும்.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காகத் தனிப்பட்ட முறையில் எவரும் அழைக்கப் பெறவில்லை. இஃது ஒவ்வொருவருக்கும் அழைப்பு விட்டுச் செய்யப் பெற வேண்டிய செயல் அன்று. தமிழ் மொழி, இன, நாட்டு நலன்களில் உண்மையாகவே அக்கறை கொண்டிருப்பதாகக் கருதிக் கொண்டிருக்கும் கீழ்க் காணும் தலைவர்களும் எல்லாரைப் போலவே இதழ் வழியும் அறிக்கை வழியும் அழைக்கப் பெற்றுள்ளனர். அவர்கள் வருவார்களோ, வரமாட்டார்களோ நமக்குத் தெரியாது. மாநாட்டுத் தொடக்கத்தில் அங்கு வந்திருக்கும் நல்லுணர்வுள்ள அன்பர்களில் ஒருவர் (அவர் எத்துணைச் சிறிய அகவையினராக இருப்பினும்) தலைமை தாங்கி நடத்துவிக்கக் கேட்டுக் கொள்ளப் பெறுவார்.

[முன்பக்கத் தொடர்ச்சி]

வேண்டிக் கொள்வதெல்லாம் ஒவ்வொருவரும் தவறாமல் மாநாட்டிற்கு வரவேண்டும்; நாம் இனி செய்ய விருப்பதைப் பற்றி எண்ண வேண்டும் என்பதுதான்! நேரம் வந்துவிட்டது; படை முகத்துக்கு வந்து சேருங்கள்!

-பெருஞ்சித்திரன்

எனவே அன்பர் மாநாட்டிற்கு எவரெவர் வருவர் எவரெவர் பேசுவர் என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்துக் கொண்டிராமல், தன்மானத் தமிழினத்தின் இவ் விறுதிப் போராட்டத்தில் ஒவ்வொருவரும் தவறாமல் போய்க் கலந்து கொள்ள வேண்டும், கருத்தறிவிக்க வேண்டும். எதிர்காலத் தமிழினப் புத்துணர்வுக் குமுகாயம் அமைக்கின்ற பணியில் ஒவ்வொருவரும் பங்கு கொள்ள வேண்டும் என்ற தன்னலம் மறந்த உயரிய நோக்குடன் திருச்சி மாநாட்டிற்கு வருதல் வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இன்னும் அங்கு வரவிருக்கும் அன்பர்களில் திருமணமான அன்பர்களாயிருப்பின் கட்டாயம் தம் மனைவி மக்களுடனும், திருமணமாகாத அன்பர்களாயிருப்பின் தம் உடன் பிறப்புகளுடனும் நண்பர்களுடனும் வந்து கலந்து கொள்ளுதல் வேண்டும்.

மாநாட்டின் முதல் நாள் காலை 7 மணிக்கு மாநாட்டு அரங்கினின்று பெரிய ஊர்வலம் தொடங்கி நகரத்தின் முகாமையான தெருக்களில் வீர நடையிட்டு மீண்டும் மாநாட்டு அரங்கிற்கே மீளும்.

மாநாட்டில் தொண்டர்களாக உழைக்க விரும்பும் அன்பர்கள் முன்கூட்டியே தென்மொழிக்குத் தங்கள் விழைவை எழுதி ஒப்புதல் பெறவேண்டும்.

மாநாட்டில் கலந்து கொள்ள விருக்கும் தமிழ் வளர்ச்சி மன்றங்கள், கழகங்கள் முதலியவை தங்கள் தங்கள் பெயர் பொறித்த துணிப் படாங்களை ஏந்தி வரலாம். அத்துடன் தனித்தமிழ் மொழி முழக்கங்களையும், நாட்டு விடுதலைக் கருத்துகளையும் அட்டைகளில் எழுதிப் பிடித்துக் கொண்டு வரலாம். அத்தகைய மன்றங்கள் தங்கள் பெயர்களையும் தாம் ஊர்வலத்தில் கலந்து கொள்ள விருக்கும் வகையையும் முன் கூட்டியே தென்மொழிக்கு எழுதித் தெரிவிக்க வேண்டும்.

மாநாட்டின் பொழுதோ, ஊர்வலத்தின் பொழுதோ அன்பர்கள் தாங்களாகவோ, பிறர் தூண்டுதலாகவோ எவ்வகைப் பரபரப்பான நிகழ்ச்சிகளிலோ, போராட்டப் பூசல்களிலோ ஈடுபட வேண்டா என்று கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். மாநாட்டின் திட்டவட்டமான செயல் முறைகள் தீர்மானமாக மாநாட்டின் முடிவில் அறிவிக்கப் பெறும். அன்பர்கள் அவ்வறிவிப்பு வரை அமைதியைக் கடைப் பிடிக்கக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அடுத்த தென்மொழி இதழில் மேலும் சில விளக்கங்கள் அறிவிக்கப் பெறும். மறவாதீர்கள்! ஒன்றைமட்டும் தவறாமல் நினைவில் வையுங்கள்! மாநாட்டிற்கு மட்டும் எல்லோரும் தவறாமல் வந்துவிட வேண்டும்.

மேழம் கஅ
30—4—72
கடலூர்.

அன்புள்ள
பெருஞ்சித்திரன்
மாநாட்டு அமைப்பாளன்.

தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாட்டுச் செயற்குழு உறுப்பினர்கள்

திருவாளன்மார்: 1. மகிபை. பாவிசைக்கோ. 2. அறவாழி. 3. இறை எழிலன். 4. பெ.க. வெற்றிக்கூத்தன். 5. அ. தெ. தமிழநம்பி. 6. செம்பியன் அரிமா. 7. திருமாறன். 8. சின்னத்துரை. 9. காரை-இறையடியான். 10. காரை-அலீம். 11. அருட்குவை. 12. அரியா வளங்கோ. 13. அரிமா மகிழ்கோ. 14. அடல் எழிலன். 15. சரவணத் தமிழன். 16. புலவர் இறைக்குருவன். 17. நாரா-மகிழ்நன். 18. க. வெ. நெடுஞ்சேரலாதன். 19. ப.துரையரசன். 20. முத்துக்கிருட்டிணன். 21. கா. இளமுருகன். 22. உளங்கவரழகன். 23. இரா. பாவாணன். 24. கோ. திருநாவுக்கரசு. 25. நா. இளமாறன். 26. க. நாராயணன். 27. மு. ச. அழகேசன். 28. தரங்கை-பன்னீர்ச்செல்வன். 29. காரை-நச்சினுர்க்கினியன். 30. ந. அரணமுறுவல். 31. வே. மு. பொதியவெற்பன். 32. கதிர். சுப்பையனுர். 33. கருமலைத்தமிழாழன். 34. இரா. செ. அரசன். 35. அடற்கோ. 36. மு. பொன்னவைக்கோ. 37. தி.குமரப்பன். 38. த. அன்பழகன். 39. முருகவேள். 40. ந. முத்துக்குமரன். 41. அர. இராசாராமன். 42. புலவர் கு. அண்டிரன். 43. மு. மகிழரசன். 44. இளஞ்சித்திரன். 45. மறை. நித்தலின்பன். 46. ந. இளமுருகன். 47. கல்லை. பெருஞ்சித்திரன். 48. இராசாங்கம். 49. குழந்தைவேலன். 50. இரணியன். 51. திருக்குறள் பெருமாள். 52. புத்தன்.

பெண்டிர்

1. திருவாட்டியர்: தாமரை. பெருஞ்சித்திரன் 2. இறை. பொற்கொடி 3. பாவொளி பாவிசை 4. குமுதம் மகிழ்நன் 5. ஆண்டாள் திருமாறன் 6. அன்னகாமு பெருஞ்சித்திரன் 7. இசையரசி வெற்றிக்கூத்தன் 8. உலக முதல்வி 9. அறிவரசி 10. மான்விழி

மாநாட்டுக்கு அழைக்கப் பெறவிருப்போர்

1. அரசியல் தலைவர்கள் :

உயர்திருவாளர்கள்:

(1) கு. காமராசர்

(2) கலைஞர் மு. கருணாநிதி, தமிழக முதல்வர்

(3) பரூக் மரைக்காயர், புதுவை முதல்வர்
(4) சிலம்புச் செல்வர் ம. பொ. சி.
(5) நாஞ்சில் கி. மனோகரன்
(6) திருவாரூர் கே. தங்கராசு
(7) உலக நம்பி

2. குமுகாயத் தலைவர்கள்:

உயர்திருவாளர்கள்:

(1) தந்தை. பெரியார்
(2) குன்றக்குடி அடிகளார்

3. புலவர்கள், பேராசிரியர்கள்:

உயர்திருவாளர்கள்:

(1) மொழியியல் ஞாயிறு
ஞா.தேவநேயப்பாவாணர்
(2) நெ. து. சுந்தரவடிவேலனார்
[செ. ப. க. து. கண்காணகர்]
(3) பர். மு. வரதராசனார் [ம.ப.க.து. கண்காணகர்]
(4) பர். ஆதிநாராயணனார்
[அ. ப. க. து. கண்காணகர்]
(5) பர். சி. இலக்குவனார்
(6) பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்
(7) புலவர் பொன்னம்பலனார்
(8) பர். சாலை இளந்திரையன்
(9) பர். வ. சுப. மாணிக்கம்
(10) பேரா. சொக்கப்பா
(11) புலவர் ந. இராமநாதன் கீ. க. தே.
(12) பேரா. ம. இலெ. தங்கப்பா
(13) பேரா. நிலவழகனார்
(14) பேரா. க. ப. அறவாணன்
(15) புலவர் வி. மு. சோமசுந்தரம்
(16) பேரா. மு. தமிழ்க்குடிமகன்
(17) பேரா. இரா. இளவரசு
(18) பேரா. தமிழேந்தி

4. எழுத்தாளர்கள், ஆராய்ச்சியாளர்கள்:

உயர்திருவாளர்கள்:

(1) புலவர் குழந்தை

(2) கண்ணதாசன்
(3) கி. வீரமணி
(4) முரசொலி மாறன்
(5) அகிலன்
(6) குடந்தை ப. சுந்தரேசனுர்

5. தொழிலாளர்ச் சார்பினர்

உயர்திருவாளர்கள் :
(1) கே. டி. கே. தங்கமணி
(2) நாஞ்சில் செல்வன்

6. கலைஞர்கள்:

உயர்திருவாளர்கள்:
(1) ஏ. எல். சீனிவாசன்
(2) தி. க. சண்முகம்

7. மாணவர்ச் சார்பினர் :

உயர்திருவாளர்கள் :
(1) இராசா முகம்மது
(2) எல். கணேசன்

8. பெண்டிர்ச் சார்பினர் :

(1) திருவாட்டி விசாலாட்சி சிவலிங்கம்

9. தொழில், வணிகச் சார்பினர் :

உயர்திருவாளர்கள்
(1) பொள்ளாச்சி மகாலிங்கம்
(2) கருமுத்து தியாகராசன்
(3) அரசவயவர் – முத்தையா

10. பிறதுறைச் சிறப்பு அழைப்பாளர்

உயர்திருவாளர்கள்
(1) கோ. துரைசாமி
(2) வ. சுப்பையா
(3) ஈழத்தடிகள்
(4) பர். நடராசன் [பொருளியல் வல்லார்]
(5) சித்த மருத்துவர் செல்லப்பா
(6) வழக்குரைஞர் பி. இராமநாதன், க. இ. ச. இ.

ம: 142 தமிழ்நாடு தமிழருக்கே!

'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற இம் முழக்கம் இறுதியாகப் பிறந்தே விட்டது. இம் முழக்கம் மற்றவர்களால் தடுக்க முடியாதது, நம்மால் தவிர்க்க முடியாதது.

'தமிழக விடுதலை' என்னும் கண்கள் பஞ்சடைந்த பசலைக் குழந்தையை, பல நேரங்களில் ஒரு சிலர் தொட்டு விட்டு விட்டுவிட்டார்கள். இன்று நாம் அதிகார பீடத்தின் உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் அஞ்சாமல் இப் பசலையை நம் கைகளில் ஏந்திக் கொண்டுள்ளோம்.

பல முறை ஏற்றப்பட்டு ஒவ்வொரு முறையும் அணைந்து விட்ட இவ் விளக்கினை, இரு கைகளுக்கும் இடையே இன்று ஏற்றி உள்ளோம். கை சுடும் என்பது நமக்குத் தெரியும். ஆனல் வேகாமல் வேகின்ற உள்ளத்தின் சூட்டுக்கு இஃது எவ்வளவோ மேல். இந்த வியத்தகு விளக்கினை அணையா விளக்காக்குவதிலே நமது உடல் கருகினும் நன்மையே!

நம் நண்பர்களுக்கு ஆற்றலும் ஆர்வமும் நிரம்ப உண்டு. ஆனல் அஞ்சாமை கொஞ்சம் குறைவு. அதனல் கேடில்லை. நண்பர்களே! நீங்கள் இருக்கும் இடத்திலே உங்கள் அருகில் இருக்கின்ற நண்பரிடத்திலே 'தமிழக விடுதலை'க்கான தேவை குறித்து ஒரு நாளுக்கு ஒரு முறை கூறுங்கள்.

அதுவே பலநூறு ஆண்டுகளாய்ப் பூட்டப்பட்டுள்ள தமி ழன்னையின் கைவிலங்கொடிக்கும் நற்பணி என உணருங்கள். அப் பணியை இன்றே தொடங்குங்கள். அதற்கு முன்னே நீங்களே ஒரு முறை சொல்லிச் சுவையுங்கள்! "தமிழ்நாடு தமிழருக்கே!" எப்படி இருக்கின்றது? தேனினும் இனிமையாய் இல்லையா? இன்னும் ஒரு நூறு முறை சொல்லி, -அன்று-அன்று- முழங்கிச் சுவையுங்கள்! தமிழ்நாடு தமிழருக்கே! —முகிலன், வெங்காளூர்-6.

ம: 143 மக்களாட்சி முறையில் விடுதலை கிடைக்குமா?

அன்புடையீர், வணக்கம். எப்போதும் தென்மொழியில் என்னுள்ளம் கொள்ளை கொண்ட பகுதிகள் 'ஆசிரியர் உரையும்', 'மக்களவையுமே'யாகும். குறிப்பாக 'யாருமில்லை நாங்கள் தாம்!' என்ற ஆசிரியரது கட்டுரை மிகவும் தெளிவாக உணர்ச்சி மயமாக இருந்தது.

தனித்தமிழ் நாடு விடுதலை பெற வேண்டும். 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்ற உரிமை முழக்கம் உங்களது ஆசிரியவுரையில் அழகாக விளக்கப்பட்டுள்ளது. முன்னர் அறிஞர் அண்ணாவும் தி. க. வினரும் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று முழங்கியதுண்டு. 'அடைந்தால் திராவிட நாடு இன்றேல் சுடுகாடு', என்றும் எழுதியதுண்டு, தி. மு. க. வினர் அன்று!! நடுவணரசு, தம் அடக்கு முறை, மிரட்டல்கள், ஒடுக்கு முறைகளை எல்லாம் பயன் படுத்தியதைக் கண்ட தி.மு.க. தலைவர்கள் திராவிட நாடு பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டனர். தமிழ் நாட்டின் அரசுக் கட்டிலைக் கைப் பற்றினர். இக்கால், இவர்கள் ஆட்சியிலிருப்பினும் வடநாட்டு வல்லாட்சிக்கு அடிமைப்பட்டே உள்ளனர். இந்திரா காந்தியை நல்லவர்; இந்தியத்தாய், என்று புகழ் பாடுகிறார்கள் தி. மு. க. அமைச்சர்கள். இதிலிருந்து தமிழ் நாட்டின் அமைச்சர்கள் எத்துணை அளவுக்கு மாறியுள்ளனர் என்பதை நாம் உணரலாம். இந்திரா காந்தி ஒரு பார்ப்பனத்தி. எனவேதான் தமிழர்களை அடிமைப் படுத்தி ஆளுகிறார் என்று பெரியார் கூறுகிறார். அஃதாவது, பார்ப்பனர் -களே தமிழர்களை ஆட்சி செய்கிறார்கள் என்பதே பெரியாரின் கூற்று. நம் தமிழர்கள் இன்றும் அடிமை நிலையில் இருப்பதை உணரவே இல்லை. தமிழகம் பார்ப்பனர்களுக்கு அடிமை என்பது உண்மையா? பொய்யா? என்பது ஒரு புறம் இருக்கட்டும்! இந்திய அரசியல் சட்ட அமைப்பில் கூறியவாறே தேர்தல் வழி-மக்களாட்சி பாராளுமன்ற முறையில் இந்திரா அல்லது இந்தியத் தலைமை அமைச்சர் தேர்ந் தெடுக்கப் படுகிறார். எனவே இந்திரா பார்ப்பனத்தியோ இல்லையோ அவர் தேர்தல்முறை மூலம் பதவிக்கு வந்துள்ளவர். இவர் போய் மற்ற ஒருவரும் வரலாம். அரசியல் சட்டப்படியேதான் ஆட்சி நடைபெறும். இன்றுள்ள 'அரசியல் சட்டம்' நம் நாட்டு விடுதலைக்கு

வழி விடாது. இச் சட்டம் பணக்காரர்களையும், குல மத வெறியர்களை யும், நிலக்கிழார்களையும் பேணிப் பாதுகாக்கும் ஒரு வலிமை மிக்க அரண். இச் சட்டம் ஒரு நிகரமைச் சட்டம் அன்று. இது வரை யறுக்கும் முறையில் ஆட்சி நடத்துபவர் தி. மு. க. வைச் சேர்ந்த 'மு.க.'வே இந்தியத் தலைமை அமைச்சரானாலும் கூட தமிழகத்திற்கு விடுதலை கிடைக்க வழி செய்ய முடியாது. இப்போது, தனித் தமிழர்கள் இன்னும் பேரளவில் ஒன்று கூடி நாடு தழுவிய அளவில் (தமிழ் நாட்டில்) ஒரு மக்களாட்சி முறைப் போராட்டம் - (போர்க் கருவி ஏந்திய போராட்டம் அன்று!) நடத்தினால் இப்போதுள்ள 'தமிழவேள் - கலைஞர்' அரசே தனித்தமிழர்களைச் சிறைப் படுத்தி அடைக்கும்! ஏனெனில் 'இந்திய அரசியல் சட்ட அமைப்பு' அப்படித்தான் சொல்லும்! இந்திய அரசியல் சட்டம் ஒழிக்கப்பட்டால்-தான் நம்நாடு விடுதலை பெற முடியும். வடநாட்டு அரசினர் விடுதலை இயக்கங்களை வளர விடாமல் நசுக்கி ஒழிப்பதில் மிகுந்த கவன முள்ளவராவர். எனவே, தனித்தமிழகம் விரும்பும் வீரர்கள் வங்காள நாட்டு மக்களைப் போல மறப் போராட்டம் செய்யவும் ஆயத்தமாக வேண்டும். நடுவணரசும், மாநில அரசும் விடுதலை வேண்டும் மக்கள் மீது காவலர்களை ஏவுவர்; குண்டுகளை வீசுவர்; பட்டாளக்காரர்களைக் கொண்டு கொலை பலவும் செய்வர். இத்துணைக் கொடுமைகளையும் கண்டு அஞ்சா நெஞ்சத்துடன் பச்சைஅரத்தம் பரிமாறிட அணியமா யுள்ள மாமறவர்களே விடுதலைப் படையைக் கட்ட முடியும். மக்க ளாட்சி முறையில் தமிழ்நாடு விடுதலை பெறும் என்று எண்ணுவது பகற் கனவே ஆகும்.

தமிழ் நாட்டின் விடுதலைக்குப் பொதுமையர்கள்-உண்மையில் இங்குள்ள பொதுமையர்கள்-மார்க்சீயத்தையும், இலெனினீயத்தையும் மறுவற நன்குணர்ந்தவர்களானால், விடுதலை இயக்கத்திற்கு அன்பும் அரவணைப்பும் காட்டியேயாகல் வேண்டும். உண்மையான பொதுமை நெஞ்சினர் தமிழகத்தின் விடுதலையைத் திண்ணமாக விரும்புவர் என்றே யான் நம்புகிறேன்.

தி. மு. க. வினர் இன்று தமிழக விடுதலையைக் கேட்க மாட்டார்கள். இவர்கள் வாழ்நிலையும் சூழ்நிலையும் அத்தகு நிலைக்கு அவர்களை மாற்றிவிட்டன. பிரிவினைத் தடைச்சட்டம் நடைமுறை யில் உள்ளது என்பதை அறிந்தும், அண்ணா அவர்கள், 'தடைச் சட்டம் வரும்' என்று தில்லியில் பேசிய உடனேயே பிரிவினைக்

கொள்கையை விட்டு விட்டது தெரிந்தும், இந்திராவின் தேசியங்கள், பிற இயக்கத்தினர்கள் தம்மை எதிர்ப்பார்கள் என்று தெரிந்தும் தமிழ் நாட்டு விடுதலைக் கொள்கையை விட்டு விடாமல் உறுதியாக வலியுறுத்தித் தென்மொழியில் கட்டுரை எழுதியமை கண்டு களிப்புறு கிறேன். கழகக் காலத்தின் வீரம் தென்மொழியில் விளைந்துள்ளது. புதிய புறநானூறு படைக்கவும், புதிய பொதுமைத் தமிழ் நாடு காணவும் எழுந்து பணியாற்றும் தென்மொழிக்கு என் வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தமிழர்கள் நடுவில் தலைவிரித்தாடும் வறுமை, வேலையின்மை, குல, மத மூடப்பழக்க வழக்கங்கள் யாவும் ஒழிய ஒரே வழி வட நாட்டு வல்லாட்சிக்கு எதிராக நாம் நடத்த வேண்டிய போர் ஒன்றேயாகும்.

—தி. நா அறிவரசு, திண்டிவனம்.

ம: 144 'கணிப்பா'னில் குழப்பம்

அன்புமிக்க ஐயா, வணக்கம். சிலை – சுறவத் தென்மொழியில் வெளியான 'கணிப்பான்' எனும் அறிவியல் கட்டுரையைப் படித்தேன். திரு. சி. இராசாங்கம் அவர்கள் கட்டுரையை மிக அருமையாகத் தீட்டியுள்ளாராயினும், ஈரிலக்க முறையை விளக்கும் போது ஆண்டுள்ள எடுத்துக் காட்டில் ஈரிலக்க முறையையும் பத்திலக்க முறையையும் சேர்த்துக் குழப்பியுள்ளார்: அவரது விளக்கப்படி $7 = 100 + 10 + 1$ (பத்திலக்க முறையில்) என்று ஆகின்றது! இக்குழப்பத்தைத் தவிர்க்க, ஈரிலக்க முறையைக் கீழ்க் காணுமாறு விளக்கியிருக்கலாம்.

பத்திலக்க முறை பத்தை அடியலகாகக் கொண்டது. இதில் 0 முதல் 9 வரையுள்ள பத்து எண்கள் பயன்படுகின்றன. ஈரிலக்க முறை இரண்டை அடியலகாகக் கொண்டுள்ளது; 0, 1 ஆகிய ஈரெண்களைப் பயன்படுத்துகின்றது.

7 என்பது ஒரு பத்திலக்க எண். 111 என்ற எண்ணை இரு முறைகளிலும் பயன் படுத்தலாம். பத்திலக்க முறையில் 111 என்ற எண் நூற்றுப்பதினொன்றைக் குறிக்கும். ஈரிலக்க முறையில் 7-ஐக் குறிக்கும்.

பத்திலக்க முறையில்,

$$\begin{aligned} 111 &= 100 + 10 + 1 \\ &= 10^2 + 10^1 + 10^0 \end{aligned}$$

என்று ஆகும். இதன் அடியலகை இரண்டாக மாற்ற ஈரிலக்க எண் பிறக்கின்றது.

அதாவது, $10^2+10^1+10^0 \quad > \quad 2^2+2^1+2^0$
$\qquad\qquad\qquad\qquad\qquad\qquad 1 \quad 1 \quad 1$

எனவே ஈரிலக்க முறையில்

$$111 = 2^2+2^1+2^0$$
$$= 4+2+1$$
$$= 7$$

என்று ஆகின்றது.

—மு. பொன்னவைக்கோ, சென்னை-25.

ம: 145 தீபம் பார்த்தசாரதியின் புளுகு!

தமிழ் காக்கும் தலைவா, வணக்கம். இக்கால உலகில் எதை எப்படி வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாம் போல் தெரிகின்றது. அப்பட்டமான பொய், இது தான் உண்மை என்று மக்களுக்குக் கூறப் பெறுகின்றது. அது தான் இற்றைய உலகில் உண்மையும் ஆகின்றது. என்ன செய்வது? இற்றைத் தமிழகத்தின் தலையெழுத்து இது தான் போலும்.

குமுதம் இதழில் "அபூர்வ சந்திப்பு" என்னும் ஒரு பகுதி வெளியாகின்றது. இதில் திரு. இராம. அரங்கண்ணல் (நாடாளு மன்ற உறுப்பினர்) அவர்களும், தீபம் ஆசிரியர் திரு நா. பார்த்த சாரதியும் கலந்து உரையாடுகின்றனர். (குமுதம் இதழ் மதி 25. மலர் 25. 13—4—72).

1. திரு. பார்த்தசாரதி கூறுகின்றார் : "கழகத் தலைவர்கள் மக்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காகக் கொச்சைச் சொற்களை யும், வடமொழிச் சொற்களையும் அதிகம் கலந்து எழுதுகின்றனர். ஆனால் நானே, (பார்த்தசாரதி) ஜெயகாந்தனே (அவருடைய பேச்சு) அவ்வளவு வேற்று மொழிச் சொற்களைக் கையாள்வதில்லை."

2. அடுத்துக் கூறுகின்றார், "பெரும்பாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தாம் தனித்தமிழுக்குப் பாடு படுகிறார்கள் என்ற கருத்துப்பரப்புப் பரவலாக இருக்கின்றது.

ஆனால் நல்ல தமிழ் எழுதும் நானும் செயகாந்தனும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் சேராதவர்களே" என்று அரங்கண்ணலிடம் உரையாடியிருக்கின்றார். நல்ல தமிழ் என்றும், வேற்று மொழிச் சொற்கள் கலவாமல் எழுதுகின்றோம் என்றும் தப்பட்டை தட்டிக் கொள்ளுகின்ற அவர்களைப் பார்க்க ஓர் இரக்க உணர்ச்சி எழுகின்றது.

செயகாந்தனுக்குக் குமுதம் இதழ்ப் பொத்தகத்தில் அரைப் பக்கம் தான் ஒதுக்குகிறார்கள். அந்த அரைப்பக்கத்தில் செயகாந்தன் என்ன வேண்டும் என்றாலும் எழுதிக் கொள்ளலாம். இது செயகாந்தனுக்குக் குமுதம் கொடுத்திருக்கும் உரிமை. அதில் செயகாந்தன் தாம் ஒரு பெரிய எழுத்தாளர் என்றும், ஓர் அரசியல்காரர் என்றும், பெரிய பொதுவுடமை நோக்கினர் என்றும் எப்படி வேண்டுமானாலும் மிகைப் படுத்தி எழுதிக் கொள்ளலாம். எப்படி வேண்டும் என்றாலும் எழுதித் தொலையட்டும். நல்ல தமிழ் எழுதுவ தாக ஏன் தருக்கிக் கொள்ளவேண்டும்? நல்ல தமிழ் எழுதும் ஒரே ஓர் இதழ் தென்மொழி தான். அதுகூட இப்படி வீண் பெருமை அடித்துக் கொள்வதில்லை. அந்தச் செயகாந்தன் அரைப் பக்கத்தில் எழுதும் நல்ல தமிழ்ச் சொற்கள் பாரீர்; "தபால், விஷயம், சன்மானம், டிரேட்யூனியன், சம்பந்தமில்லை, சர்க்கார் இலாகாவில், உத்தியோகஸ்தன், அதர்மம், தர்மம், யுத்தம், சுதந்திரத்தில், பத்திரிக்கை, வாதிட, பேரம், நிர்ப்பந்தம், பிரசுரித்து..." முதலியவை. அந்த அரைப் பக்கத்தில் கிட்டத்தட்ட 25 வரியில் 17 வடசொற்கள்! இது தான் செயகாந்தன் எழுதும் நல்ல தமிழ். நண்பர் பார்த்த சாரதியார் அதற்குமேல்! இற்றைத் தமிழகத்தில் இதைத் தான் நல்ல தமிழ், நல்ல இதழ் என்று அரசினர் பாராட்டவும் செய்கின்றனர். தமிழா! உன் நிலையைப் பார்! எவ்வளவு கீழ் நிலையில் உள்ளது. இனியாவது விழி! எழு! ஏற்றம் காண, மாற்றம் செய்யப் புறப்படு. இல்லாவிட்டால் இனி உனக்கு வரலாறு இல்லாமல் போய் விடும். ஒரு பாவாணரும், ஒரு தென்மொழியும் இருப்பதற்குள் நமக்கு – தமிழர்களுக்கு ஒரு வழி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லா விட்டால் தமிழரின் எதிர் காலம் இருண்ட காலம் தான். இதில் எட்டுணையும் ஐயம் இல்லை.

—**க. க. ஆறுமுகம், கருக்கம் பாளையம்.**

விலங்குகளின் உடல்தூய்மையும், புனைவும். (BODY-CLEANLINESS AND TOILET OF ANIMALS.)

எசு. ஆபிரகாம், க. மு; க. அறி.
விலங்கியல் பேராசிரியர், மதுரைப் பல்கலைக்கழகம்.

எல்லா உயிரிகளுக்கும் உணவு இன்றியமையாதது. அதற்கடுத்தாற் போல் வேண்டியது உறைகை அல்லது தங்குமிடம். முதுகெலும்பிலிகளில் (Invertabrates) எறும்பு, தேனீக்கள் போன்ற குழுகாயப் பூச்சிகள் தவிர, பிற விலங்குகள் தமக்கென உறைவிடம் அமைப்பதில்லை. முதுகென்பிகளில் (Vertebrates) மீன்கள், பறவைகள் பாலூட்டிகள் தமக்கென ஓர் இருப்பிடத்தில் கூடு அல்லது முழைஞ்சு அமைத்துக் கொள்கின்றன. இவ்வாறு இருப்பிடத்தை உயிரிகள் அமைப்பது பற்றி முன்னொரு கட்டுரையில் விரிவாக விளக்கியுள்ளேன். ஈண்டு வெவ்வேறு விலங்குகள் எவ்வாறு தங்கள் இருப்பிடங்களைச் செவ்வையாக வைத்துக் கொள்கின்றன என்று பார்ப்போம்.

குழுகாயப் பூச்சிகளில் (Social Insects) தேனீ, எறும்பு முதலிய வற்றின் கூட்டுக் குடியிருப்பில் முறையே வேலைக்காரத் தேனீக்களும் வேலைக்கார எறும்புகளும் உள. இவை தாம் வாழும் குடியிருப்பைத் தூய்மைப் படுத்துகின்றன. குடியிருப்பிலுள்ள அரசன் அரசியையும் தூய்மைப் படுத்துகின்றன.

இவ்வேலைக்காரப் பூச்சிகள் (Workers) தங்களுடம்பையும் துப்புரவாக வைத்துக் கொள்கின்றன. தேனீக்கள் பல மலர்களில் தத்தித் துதைந்து அவற்றிலுள்ள பூந்தாதுகளையும் இனிய தேனையும் அருந்துகின்றன. சிறிதளவான பூந்தாதுகளை (மகரந்தப் பொடியை) அவை வாழும் குடியேற்றத்(colony)துக்குக் கொண்டு வருகின்றன. இப் பொருட்களைத் தகுந்த இடத்தில் சேமித்து வைக்கின்றன. பின்பு அவை தம் உடம்பைத் தூய்மைப் படுத்துகின்றன. தேனீக்களுக்கு மூவிணைக் கால்கள் உள. முன் கால்களின் முன்புறத்தில் வளையா முள்மயிர்கள் (Bristles) உண்டு. இவை தேனீயின் உடலில் ஒட்டியிருக்கும் பூந்தாதை நீக்குவதற்குப் பயன்படும். அதனால் இவற்றிற்குப் பூந்தாதுத்தூரிகை (Pollen Brush) என்று பெயர். இதேபோல் தேனீயின் கண்களில் ஒட்டி

யிருக்கும் பொருட்களை நீக்க, 'கண்தூரிகை' யும் (Eye Brush) தொடுகருவியைத் தூய்மைப்படுத்த 'தொடுகருவிச்சீப்'பும் (Antennal Comb) உள. இவை தவிர, நடுக்கால்களிலிருக்கும் பூந்தாதை நீக்க, 'பூந்தாது முள்' (Pollen Spur) களும் உண்டு. தேனிக்களுக்குத் தங்கள் உடலைத் தூய்மையாக்க இத்தனைக் கருவிகளா வேண்டும்?

மீன்கள் நீரில் வாழ்ந்தாலும் அவற்றின் உடம்பிலும் செவுள்களிலும் (Gills) பிற பொருளோ ஒட்டுண்ணிகளோ ஒட்டிக் கொள்ளலாம். அவற்றை எவ்வாறு நீக்குவது? அவற்றை நீக்க, கடலில் 'தூய்மைப்படுத்தும் மீன்'கள் (Cleaner fishes) உண்டு. இவை 'மஞ்சிக மீன்கள்' (Barber fishes) என்று அழைக்கப் பெறுகின்றன. இவை பிற மீன்களின் உடம்பிலும் செவுள்களிலும் ஒட்டியிருக்கும் வேற்றுப் பொருட்களை நீக்குகின்றன. இதுவே இவற்றின் வேலை. இம் மீன்கள் நன்னீரில் (Fresh Water) கிடையா. இவை வெவ்வேறு குலங்களைச் (Orders) சேர்ந்தவையாயிருப்பினும் இடுக்கிமுள் (Tweezes) போன்ற பற்களை உடையன. ஒளிர் நிறமுடையன. பிற மீன்களின் அழுக்கைப் போக்கும் இத்தூய்மைப் பணிகளில் இவ்வகை மீன்களிற் சில இளமையில் மாத்திரம் ஈடுபடு கின்றன. சில வாழ்நாள் முழுவதும் இவ் வூழியத்தைச் செய்கின்றன.

துப்புரவு செய்வோன் - வழமைக்காரன் (Cleaner-customer) உறவு நிலையானதன்று. துப்புரவாக்கப் பெறவேண்டிய மீன்கள் கடலடித்தளத்தில் (Sea floor) குறிப்பிட்ட இடத்திற் கூடுகின்றன. அப்போது இம்மஞ்சிக மீன்கள் தங்கள் வழமையாளர்களான பிற மீன்களின் வாய், உடம்பு முதலிய பகுதிகளைத் துப்புரவு செய்கின் றன. அவற்றின் செவுள் அறைக்குள் (Gill Chamber) சென்று அங்கு ஒட்டியிருக்கும் ஒட்டுண்ணிகளை (Parasites) நீக்குகின்றன. இப் பேருதவிக்காக இம்மீன்களைப் பிறமீன்கள் உண்பதில்லை; துன்புறுத்துவதில்லை. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற வள்ளுவர் சொல்லை நிறைவேற்றுகின்றன போலும்!

துப்புரவு செய்யும் மீன்களை நிறத்திலும் பருமனிலும் ஒத்த "போலி மஞ்சிக மீன்கள்" உண்டு. இவை பிற மீன்களைத் துப்புர வாக்குவதற்கு மாறாக அவற்றின் துடுப்புகளை (fins) யும் தோலையும்

கடித்து விடுகின்றன. சுறு மீனில் ஒட்டியிருக்கும் 'ஒட்டு மீன்' [Shark sucker] ஒரு துப்புரவாக்கும் மீன்தான். இம்மீன் சுறுமீனைத் துப்புரவு செய்வதால், சுறுமீனால் பல இடங்களுக்குத் தூக்கிச் செல்லப்பெறுகிறது.

பறவைகள் தங்கள் கூடுகளைத் துப்புரவாக வைத்துக் கொள்கின்றன. அவை எவ்வகையிலும் தங்கள் உறைவிடத்தைக் கறைப் படுத்துவதில்லை. சிறப்பாக, குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளியேறியவுடன் அவை கூட்டைக் கறைப்படுத்தலாம்; அல்லது குஞ்சுகளின் எச்சத்தால் கறை ஏற்படலாம். ஆனால் இயற்கை அன்னை பறவைகள் தங்கள் உறைவிடத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள உதவுகின்றாள்! புலாலுண்ணிகளின் வளர்ச்சியின் பின் நிலைமைகளில் இளங்குஞ்சுகள் சற்றுப் பின்னால் நகர்ந்து தம் எச்சம் கூண்டிற்கு வெளியே தெறித்து விழும்படி உந்தித் தள்ளு கின்றன. இச் செயலில் அதன் கழிவாயின் தசைகள் உதவு கின்றன. சிட்டு, காகம் முதலியவற்றின் பார்ப்புகளின் எச்சம் உணவுக்குழலில் உண்டாகும் மெல்லிய உறையில் பொதிந்து சிறு பொட்டலங்களாக வெளியே வருகிறது. இவ்வெச்சப் பொட்டலங்கள் வெளியே வந்தவுடன் தாய்ப்பறவை அவற்றை உண்டுவிடுகின்றன; அல்லது அவற்றை எடுத்துத் தொலைவில் எறிந்து விடுகின்றன.

சில பறவைகள் தம் குஞ்சுகள் சிறியவையாய் இருக்கும்போது அவற்றின் எச்சத்தை உண்டு விடுகின்றன. ஆனால் அவை சற்று வளர்ந்ததும், அவற்றின் எச்சத்தை அலகினால் எடுத்து வெளியே எறிந்து விடுகின்றன. கருங்குருவிகள் [Swallow] நாகணவாய்ப்புள் (மைனா) முதலியவற்றின் பச்சிளங்குஞ்சுகளும் தம் எச்சம் கூண்டுக்கு வெளியே எறியப்பட, அதை உந்தித்தள்ளுகின்றன. மரங்கொத்திகள் தம் இளங்குஞ்சுகளின் எச்சத்தை மரத்தூளோடு கலந்து கூண்டுக்கு வெளியே தள்ளிவிடுகின்றன. மீன்கொத்திகளின் குஞ்சுகள் அவை வாழும் பொந்தின் ஒரு பக்கத்தைக் கழிவறையாகப் பயன்படுத்துகின்றன. ஃபில்லோசு கோப்பசு [Phylloscopus] என்ற 'மூாலுங் (ரீங்காரக்) குருவி' [Willow Warbler] கவிகை மாடக் [Domeshaped] கூடுகட்டும் பறவை இதன் குஞ்சுகள் தம் எச்சப்பொட்டலங்களை உள் நுழைவாயிலுக்கு வெளியே கூண்டின் ஓரத்திலே போட்டுவிடுகின்றன. பின்பு அவற்றின் பெற்றோர் இவ் வெச்சப் பொட்டலங்களை அகற்றி விடுகின்றன.

பச்சிளம் பார்ப்புகளின் எச்சப் பொட்டலங்களை அவற்றின் பெற்றோர் அகற்றுவதில் ஓர் உள்ளங்கவர் செய்தி உண்டு. பெரும்பாலான பறவையினங்களின் பச்சிளங்குஞ்சுகளில் தம் தாய்ப்பறவை அலகினால் தம் கழிவாயைச் சுற்றிலும் தடவினால்தான் அவற்றால் எச்சத்தை வெளியேற்ற முடியும். இதற்காக அக்குஞ்சுகள் தம் வால் புறத்தைச் சற்று உயர்த்தியே வைத்துக்கொள்கின்றன. ஆனால் 'குடம்பை [கூடு] தனித்தொழியப் புட்பறந்த' பிறகு எச்ச மகற்றும் பணி தாய்க்குமில்லை; சேய்க்குமில்லை.

பெரும்பாலான பறவைகள் தம் உறைவிடங்களைத் துப்புரவாக வைத்துக்கொள்கின்றன. ஆயினும் எந்நெறிக்கும் ஒரு [விதி]விலக்கு இருக்கலாமல்லவா? எடுத்துக்காட்டாகக் கொண்டா லத்திப் பறவை[Hoopoe]யைக் கூறலாம். இதன் தலையின் மேலுள்ள கொண்டையைத்தன் விருப்பப்படி நிமிர்த்தவோ படுமட்ட மாக [Horizontal] வைத்துக் கொள்ளவோ இதனால் முடியுமாதலால் இப்பறவைக்கு இப்பெயர் கொடுக்கப் பெற்றது. இப்பறவை மரப் பொந்தில் முட்டையிடுகிறது. ஆனால் இது குஞ்சுகள் பொரித்த பிறகு அவற்றின் கழிவுப் பொருளை அகற்றுவதில்லை. ஆகையால் அதன் பொந்திலுள்ள கெட்ட நாற்றம் மக்களுக்குக் குமட்டலை உண்டுபண்ணக் கூடியது என்கிறார்கள்.

முதிர் பறவைகளது உடற்றூய்மையைப் பார்ப்போம். பறவைகள் தம் உடற்றூய்மையில் மிகுந்த கவனம் செலுத்து கின்றன. பறவைகள் தண்ணீரில் குளிப்பதில் மிக மகிழ்ச்சியடை கின்றன. அவை தண்ணீரில் குளிக்க விரும்புகின்றன. வீட்டில் வளர்க்கப்பெறும் புறாக்கள் சிறு தொட்டியிலுள்ள நீரிற் குளித்து, பின்பு தம் இறகுகளைக் கோதி ஒழுங்காய் அமைப்பதை நாம் பார்த்திருக்கிறோம். வீட்டில் வளர்க்கப் பெற்ற ஓர் ஆந்தை தான் ஒரு தடவை குளித்த நீரில் மறுமுறை குளிக்க மறுத்ததாக ஒருவர் எழுதியுள்ளார். தூய்மையற்ற நீரில் குளிக்க யார் விரும்புவார்? மாலையில் காகங்கள் அந்தநாள் வேலையை முடித்துவிட்டு நீரிற் குளித்துவிட்டு ஆற்றங்கரையில் வரிசையாய் வீற்றிருக்கும் காட்சி என்னே! நானே அக்காட்சியைக் கண்ணுற் பருகியுள்ளேன். பொதுவாகப் பறவைகள் நீருண்டவுடன் அவற்றுக்கு உள்ளஎழுச்சி உண்டாகிறது. அதன் விளைவாக முதுகு இறகுகளைச் சிலிர்த்து

நீர்த்திவலைகள் உண்டாகும்படி நீரைத் தம் இறகுகளால் அடித்து, மட்டில்லா மகிழ்ச்சியுடன் விளையாடுவதைப் பார்ப்பது நம் கண்ணுக்கொரு விருந்தாகும்.

குளித்த பின் மக்கள் மயிருக்கு நெய் தடவி முகத்தில் நறுமணத்தூள் [Face Powder] தேய்த்துத் தம் மேனியை மினுக்கு கின்றனர். பறவைகளும் தம் இறகுகளுக்கு நெய் தடவுகின்றன. இந்நெய் பறவையின் வாலின் மேற்புறத்திலுள்ள ஒரு சுரப்பியில் உண்டாகின்றது. பறவை தன் அலகினால் இந்நெய்யை எடுத்து இறகுகளுக்குத் தடவுகிறது. நீர்முழ்கிப் பறவைகளில் [Divers] இந்த நெய் மிகுதியாக உண்டு. இஃது அப்பறவைகளின் இறகுகள் நீரில் நனைந்துவிடாதவாறு தடுக்கின்றது. பறவை மிகுதியாக மழையில் நனைந்தால் அது மிகத் தொல்லையோடு பறக்கின்றது. பின்பு கிளையில் அமர்ந்து நெய் தடவி இறகுகளைக் கோதிச் சற்றுக் காய வைத்த பின்னர் பறந்து செல்கின்றது.

பறவைகளின் தூள் [Powder] எங்கிருந்து கிடைக்கின்றது? நாரை [Heron] இனப் பறவைகளிலும், பருந்து, பைரி இனப் பறவைகளிலும் மார்பில் மென்தூவி [Powder Down] என்ற நுண்ணிறகுகள் உள. இவற்றின் உச்சிப் புறம் வளர்ந்து சிதைந்து அதன் மயிர்ப்புரதம் [Keratin] தூளாகிறது. இத்தூள் மிக நுண் செதிள்களா லானது. மெழுகு போலுள்ள இத்தூள் பூப்பொலிவை [Bloom] உண்டுபண்ணுகிறது. இத்தூளே பறவையின் முகத்தூள் [Face Powder] ஆகிறது. நாரையினம் சளிப்பொருள் [Mucus] உள்ள விலங்குகளாகிய மீன், நத்தை முதலியவற்றை உண்டபிறகு இத்தூளை எடுத்துக் கழுத்திலும் தலையிலும் தடவிக்கொள்கிறது.

பறவைகளுக்குச் சீப்பு வேண்டுமே? மக்களுக்குச் சீப்பு வீடுகளிலுண்டு. பறவைகளுக்குச் சீப்பு அவற்றின் கால்களில் அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக நாரை இனத்தில் [Ardeidae] நடுக்கால் விரலில் சீப்புப்போன்ற ஓர் அமைப்பு உண்டு. 'பெரும் வாயுடையபி' [Frogmouth] என்ற பறவையின் (நம் நாட்டுப் பறவை) நடுக்காலில் சீப்புப் போன்ற அமைப்புகள் உள. இச்சீப்புப் போன்ற அமைப்புகள் இறகுகளை ஒழுங்குபடுத்த உதவலாம் என்கிறார்கள். நாரை தன் முகத்தூளைத் தடவிய பிறகு ஒரு காலில் நின்று கழுத்தை நீட்டித் தன் இறகுகளில் மிகுதியாக ஒட்டியுள்ள

தூளை நீக்கி விடுகிறது. பின்பு தன் அலகை இறகுகளில் தேய்த்துத் துப்புரவாக்குகிறது. ஒவ்வோர் இறக்கையும் தூய்மைப் படுத்தப் பெறுகிறது. ஒரு காலில் நின்று கொண்டு இன்னொரு காலை நீட்டி அதன்மேல் தன் இறக்கையை விரிக்கிறது. பின்பு தன் காலைப் பழைய நிலைக்குக்கொண்டு போகிறது. இச்செயல் வண்ணான் நமது ஆடைகளைச் சலவைப் பெட்டியால் அழுத்திச் சமன் செய்வதை நிகர்க்கும். இச் செயலால், ஒழுங்கின்றியிருந்த இறகுகள் தத்தம் இடங்களில் அமைகின்றன. இறுதியில் இறகுகள் இன்னும் நன்றாக, ஒழுங்காக அமையும் பொருட்டுத் தன் அலகினால் அவற்றை நீவுகிறது.

சில சமயங்களில் நீர் கிடைப்பது எளிதன்று; அது மிகுந்த தொலைவில் இருக்கலாம்; அல்லது வறண்ட காலமாய் இருக்கலாம். அப்போது புட்கள் புழுதியிற் புரண்டு 'புழுதிக்குளிப்பு' [Dust-bath] நடத்துகின்றன. ஒருவேளை இப் புழுதிக் குளிப்பால் உடம்பில் ஒட்டியுள்ள ஒட்டுண்ணிகள் நீக்கப்படலாம். சப்பான் நாட்டில் கோழியினத்தைச் சேர்ந்த சில பறவைகள் வட்டக்கிண்ணம் போன்ற வளையிற் புழுதிக் குளிப்பை நிகழ்த்துகின்றன.

நம் நாட்டு நீர்க்காகம் [Cormoraut] நீராடிய பின்னர் உயரமான மரக்கிளையில் உட்கார்ந்து, தன் இறகுகளுக்கு நெய் தடவுகிறது. இவ்வாறு நெய் தடவுவது கண்ணுக்கினிய காட்சிகளில் ஒன்று. பொதுவாகப் பறவைகள் பறப்பதற்குப் பக்க இறகுச்சிரைக [Barbules]ளுக்கு நெய் தடவா விட்டால் அவை பறப்பதற்கு உதவ மாட்டா என்று முன்பு நிலவிய கருத்து இப்பொழுது கேள்விக்கிடமாக உள்ளது. ஏனெனில், நாகணவாய்ப்புள் (மைனா) இனப்பறவைகளில் நெய்ச்சுரப்பி இல்லை. ஆனால் அப்பறவைகட்கு மிகுதியாகக் கெடுதல் விளையவில்லை. அப்பறவைகள் சற்றுத் தொல்லைப் பட்டுப்பறந்தன.

பாலூட்டிகளின் மேனி மினுக்கல் மிக வியக்கத் தக்கது. பாலூட்டிகளின் பல் எப்போதும் துப்புரவாய் இருக்கும். கொறிப்பன வற்றின் [முயல், எலி இனம்] மஞ்சள்நிறப் பற்களும் பிறவற்றின் முல்லை நிகர் வெள்ளைப்பற்களும் எப்போதும் தூய்மையாகவே உள. இதற்குக் காரணம் தொடர்கிறது. கன்னத்தின் உட்புறத்திலும் உதட்டிலும் சில கொறிப்பனவற்றின் நாவின் பக்கங்களிலும் 'இழுவை' [Rubber] போன்ற வளர்ச்சிகள் அல்லது நீட்சிகள் [Processes] இருக்கின்றன. இவை விலங்குகளில் 'பற்றூரிகை'

[Tooth brush] போலப் பயன்படுகின்றன. தாடைகள் மேலும் கீழும் இயங்குங்கால் இவ்வளர்ச்சிகள் — இத்தூரிகைகள் பற்களிலுள்ள கறையை நீக்குகின்றன.

விலங்குகளின் உடலை மூடும் உறை தோல் ஆதலால், அவை தோலைத் துப்புரவாய் வைத்துக்கொளல் இன்றியமையாதது. மாந்தன் உட்பட — விலங்குகளின் உடல் நலத்தைத் தோலின் நிலைமையிலிருந்து உய்த்துணரலாம். ஆகையால் தோலிலுள்ள, வேண்டாப் பொருளை ஆடு, மாடு, குதிரை போன்ற 'குளம்பிகள்' [Ungulates] நாக்கால் நக்கியும் எட்டியவரை கொம்பால் சுரண்டியும் குளம்புகளால் நீக்கியும் தம் தோலைக் கறையிலாது வைத்துக் கொள்கின்றன. ஆனால் பாலூட்டிகளின் முதன்மையான நற்றூரிகை நாவே.

புலாலுண் பாலூட்டிகளின் நாவில் நுண் முட்போன்ற புற வளர்ச்சிகள் (Out growths or processes) உண்டு. இவை எலும்புகளில் ஒட்டியுள்ள ஊனை அகற்றுவதற்கும் தம் தோலிலுள்ள கறையை நீக்குவதற்கும் தம் அருமருந்தன்ன குட்டிகளை நக்கி அவற்றைத் துப்புரவாக்கி அழகுபடுத்துவதற்கும் பயன்படுகிறது. பயிருண்ணிப் (Herbivorous) பாலூட்டிகளும் இம் முறையைக் கையாளலாம். ஆனால் புலாலுண்ணிகள் தம் நாவுக்கெட்டாத உடற் பகுதிகளைத் (எடுத்துக் காட்டாகத் தலை உச்சி, கழுத்து, முதுகு முதலிய பகுதிகளையும்) தூய்மையாக்குகின்றன. இவ் விலங்குகள் முதலாவது தம் உள்ளங்காலை (Paw) நக்கி அதை நனைக்கின்றன. பின்னர் இவ்வாறு நனைந்த பாதத்தால் மேலே சொல்லப் பெற்ற பகுதிகளைத் துப்புரவாக்கி அழகு படுத்துகின்றன. ஆகையால் புலாலுண் பாலூட்டிகள் நனைந்த "உடல் தேய்ப்புப் பஞ்சை" (நாக்கை)ப் பயன்படுத்துகின்றன வென்றால், அது மிகையாகாது. ஆனாலும் புலாலுண்ணிகளின் கூருகிர்க் காலடி(Paw)யை விட ஆப்பிரிக்காவின் 'கேப்'(Cape) பகுதிகளில் உள்ள குதிக்கும் முயலின் [Jumping hare] முன் உள்ளங்கை (Fore pow) மிகுந்த முற்போக்கானது. இவற்றின் பற்கள் சீப்புப்போல் பயன்படுகின்றன.

இவ்வகைப் பற்சீப்பு லெமர்களில் மாத்திர மன்று, பிற விலங்குகளிலும் காணப் பெறுகின்றது. 'பறக்கும் லெமர்' (Flying Lemur or Galespithecus) என்ற பாலூட்டியிலுமுண்டு; வௌவாலிலும் காணப்பெறுகின்றது. இவ் விலங்குகளின் ஒவ்வொரு

வெட்டுப் பல்லும் சீப்புப் போலச் சிறப்பமைப்பு உடையது. இச் சீப்புப் போன்ற பற்கள் நொடுஞ்சாண் கிடையாயும் மேற்பற்களைத் தொடாமலும் அமைந்துள்ளன. இப் பற்கள் மயிரை ஒழுங்காக அமைக்க உதவலாம் என்று கருதப் பெறுகிறது. பறக்கும் இப் பாலுட்டிகளில் சீப்புப் போன்ற இப்பற்கள் இருப்பதற்குக் காரணம் இவற்றின் விரல்கள் செட்டைகளிற் பதிந்து இருப்பதால் அவை உடம்பின் பகுதிகளைச் சுரண்ட உதவாமல் இருப்பதே ஆயினும் இப் பாலூட்டிகளின் கால் விரல்கள் பிற பாலூட்டிகளின் பற் சீப்புகளை விட முழுநிலையான உடலை அழகு படுத்தும் கருவிகளாக உள என்பது சொல்லப் பெறுகிறது. இந்த நுண் சீப்புகள் செயலாற்றுவதைச் சில உயிரியல் அறிஞர்கள் அமெரிக்காவிலும், ஆத்திரேலியாவிலும் உற்று நோக்கி உன்னிப்பாகக் கவனித்துள்ளார்கள். வௌவால்களின் ஐவிரல்களில் நடு மூன்றும் பொதுவான அமைப்புடையவை. ஆனால் கால் பெருவிரலும் கடைசியிலுள்ள சிறு விரலும் சற்றுப் பெரிதாக வும், அகலமாகவும் இருக்கின்றன. அவற்றின் வெளியோரங்களில் வியக்கத் தக்க நுண்மயிர்கள் உண்டு. இந்த முள்மயிர்கள் ஒரு பட்டை போல் அமைந்துள்ளன. இம் முள்மயிர்ப் பட்டைகள் பாதத்தின் இரு பக்கங்களிலும் நீட்டிக்கொண்டிருக்கின்றன. பாராட்டத்தக்க இன்னோர் உண்மை என்னவென்றால், ஒவ்வொரு முள்மயிரும் அதன் நுனிக்குப் பின் சற்றுத் தொலைவில் செங்கோணத்தில் (Right angle) வளைந் துள்ளது. பின்னும் இம் முள்மயிர்களின் நுனிகள் பாதத்தின் நடுக் கோட்டை நோக்கி, உள் நோக்கி வளைந்துள. ஆகையால் இம் முள் மயிர்கள் ஓர் இரட்டைச் சீப்புப்போல் (Double curry comb) செயலாற்றுகின்றன.

சில பாலூட்டிகளில், முடியை அணி செய்யச் சிறப்பமைப்புகள் உண்டு. லெமர்களின் [Lemurs] காலில் இரண்டாவது விரல் நேராகச் சற்று வளைந்துள்ளது. இதில் வளைந்த உகிரும் உண்டு. பிற விரல்களில் தட்டையான உகிர்கள் உள. தார்சியசிசு [Tarsius] கால் விரல்களில் இரண்டாவது மூன்றாவது விரல்களில் கூர்மையான உகிர்கள் உண்டு. பிற விரல்களில் தட்டையான உகிர்கள் காணப் பெறுகின்றன. இக்கூர்மையான உகிர்கள் முடியை அழகு செய்வதில் பயன்படமுடியும் என்று எண்ணுகிறார்கள். மயிரை அழகு செய்யும் கூறிய உகிர்களையுடைய இரு விரல்களும் ஒன்றோடொன்று பக்கத்தில் இருக்கின்றமையால் அவை ஒன்றை யொன்று தொட்டுக் கொண் டிருக்கின்றன.

தென்னாட்டுப் புலிகளின் தூய்மை பற்றி முன்னாள் வன விலங்குப் பாதுகாவலர் திரு. எம்.ஏ. பாட்சா அவர்கள் பின் வருமாறு எழுதுகிறார்: "முதுமலை விலங்குகளின் புகலிடத்தில் [Sanctuarils] புலிகள் வாழும் முழைஞ்சுகள் உண்டு. நான் பல புலா லுண்ணிகளின் முழைஞ்சுகளைப் பார்வையிட்டிருக்கின்றேன். எல்லாவற்றிலும் மிகத் தூய்மையாயிருப்பது புலிவாழ் முழைஞ்சே. அங்கு அழுக்கென்பது அணுவளவும் கிடையாது. முழைஞ்சில் புலியின் சாணம் அல்லது அது கொன்று தின்ற வனவிலங்கின் எலும்புகள், பிற உறுப்புகளின் எச்சம் இருக்கிறதா என்று ஆராய்ந்தேன். அங்கு ஒன்றையும் நான் காணவில்லை. அங்கு கெட்ட நாற்றமுமில்லை. புலியின் புகலிடத்தின் தூய்மையைப் பார்த்தீர்களா? மக்களின் வீட்டைப் பற்றி இவ்வாறு எழுத இயலுமா?

பூனையின் தூய்மை பற்றி இங்குப் புகலுவது கொல்லத் தெருவில் ஊசி விற்பதை நிகர்க்கும். தன் விட்டையை மூடும் பிற விலங்கு ஏதாகிலும் உண்டா? மக்கள் கூடப் பூனையோடு இத்தூய் மையில் போட்டியிட முடியுமா?

யானை, காண்டா விலங்கு [Rhinocerous] முதலிய விலங்குகள் சேற்றிற் புரண்டு தம் தோலிலிருந்து பூச்சிகளை நீக்குகின்றன. யானை நீர் கொண்டு செல்லும் குழாய் [Hose] உள்ள தும்பிக்கையால் நீரைப் பீச்சித் தன் உடம்பைத் துப்புரவாய் வைத்துக் கொள்கின்றது. O

தென்மொழி, கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா	14 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	5 உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75 காசு	90 காசு	1-10

தனித்தமிழ் வளர்க்கும் இலக்கிய ஏடு

பூஞ்சோலை

ஆசிரியர்: காரை-இறையடியான், காரை-அழகன்

ஆண்டுக் கட்டணம் 5 உருபா. தனிஇதழ் விலை 40 காசு.

பூஞ்சோலை, காரைக்கால்-1

திராவிட மொழிகளில் மொழிமுதல் யகரம்

பர். மோ. இசரயேல், தமிழ்த்துறை
மதுரைப் பல்கலைக்கழகம்.

முந்தைத் திராவிட மொழியில் (Proto-Dravidian Language) யகரம் மொழி முதலில் வழங்கிய மெய்யொலியன்களில் ஒன்று. தொடக்க நிலையில் அது பல திராவிட மொழிகளிலும் மொழி முதலில் வழங்கிக் காலப் போக்கில் கெடுதல், திரிதல் ஆகிய மாற்றங்களை அடைந்திருக்கலாம். இம் மொழி முதல் யகரம் பல்வகையாலும் சிதைவுற்றுப் போனதற்கு அதை ஒலிப்பதின் முயற்சி அருமையே காரணமாகும்.

'யா'வென் வினாவெழுத்தின் அடிப்படையில் அமைந்த பெயர்களும் யான், யாம் என்னும் தன்மைப் பெயர்களும், யாண்டு, யாமை, யாறு, யானை, யா, யாடு போன்ற சொற்களும் முந்தைத் திராவிட மொழியில் யகரமெய் மொழி முதலில் அமைந்த சொற்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. யா என்னும் மரப்பெயர், யாணர் யாரி, யாழ, யாழல், யாழ், யாளி, யாறு போன்ற சில சொற்கள் பண்டைத் தமிழ் இலக்கணங்களிலோ, இலக்கியங்களிலோ, காணப் பட்டாலும் இவற்றிற்குரிய இனமொழிச் சொற்கள் (Cognates) பிறதிராவிட மொழிகளில் காணப்படுதல் இல்லை. பழந்தமிழ் இலக்கண ஆசிரியர் தொல்காப்பியனார்,

'ஆவோ டல்லது யகரம் முதலாது' (தொ. எழு ... 65)

என்று கூறுவதையொட்டி இச்சொற்களில் யகரமெய் ஆவோடு மட்டும் இணைந்து மொழி முதலில் நிற்பதால் இவையும் தூய திராவிடச் சொற்களாகும்.

பல திராவிட மொழிகளிலும் காணும் இனச் சொற்களை ஒப்பு நோக்கி யகரமெய் காலப் போக்கில் என்னென்ன மாற்றங்களை அடைந்துள்ளது என்பதையும் அந்த மாற்றங்களுக்கு அடிப்படைகள் எவை என்பதையும் ஆராய்ந்து காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

யாடு

தமிழ்: யாடு, ஆடு. மலையாளம்: ஆடு. கோதா: ஆர். தோடா: ஓட். கன்னடம்: ஆடு. குடகு: ஆடு. துளு: ஏடு. தெலுங்கு-ஏடிகா. கூயி-ஓட. குருக்-ஏடா, மால்டோ-ஏடே. பிராகுயி-ஏட்.

யாமை

தமிழ்-யாமை, ஆமை. மலையாளம்-ஆம. கோதா-ஏம் கன்னடம்- ஆமெ; ஏவெ. துளு- ஏமெ. தெலுங்கு- தாபேலு, தாமேலு கோண்டி- ஏமுல். கூயி- சேம்பி. கூவி- தாம்பெலி.

யானை

தமிழ்- யானை, ஆனை. மலையாளம்- ஆன. கோதா- ஆன். தோடா- ஆன். கன்னடம்- ஆனெ. குடகு- ஆனெ. துளு- ஆனெ. தெலுங்கு- ஏனுகு. கோலாமி- ஏனுகி பார்சி- ஏனு. கோண்டி- ஏனி. கோண்டா- ஏனி.

யாடு, யாமை, யானை ஆகிய சொற்கள் வெவ்வேறு திராவிட மொழிகளில் வழங்குகின்றமையைப் பார்த்தால் பழந்தமிழில் மட்டுமே மொழி முதல் யகரம் நிலைபெற்றுள்ளது. மற்றைய மொழிகளில் மொழி முதல் யகரம் மறைந்து போயிற்று என்பது போதரும். தென் திராவிட மொழிகளின் யகரம் மறைந்த பின்னர் ஆகாரம் மொழிமுதலாகின்றது. நடுத்திராவிட மொழிகளிலும் வடதிராவிட மொழிகளிலும் ஏகாரமே மொழி முதலில் காணப்படுகின்றது. இவற்றில் மூந்தை மொழியில் அமைந்திருந்த யகரமெய்யின் அண்ணச்சாயலாலே ஏகாரம் தோன்றிற்று எனலாம். தோடாவில் அதில் காணும் பொது வியல்புக் கேற்றபடி ஓகாரம் ஆகாரத்திற்கு ஒப்பொலியனாக அமைந்துள்ளது.

தென் திராவிட மொழிகள்—யா > [ஆ

நடு, வட திராவிட மொழிகள்—யா > [ஏ

மாற்றுப்பெயர்கள் (Pronouns)

மூந்தை மொழியில் யகரமெய் முதலோடு அமைகின்ற மூன்று மாற்றுப் பெயர்களை மீட்டுருவாக்கம் (Reconstruct) செய்ய முடியும். அவை யான், யாம் என்னும் தன்மைப் பெயர்களும், யா வென்னும் அடியாகப் பிறந்த வினாப் பெயர்களும் ஆகும். முதலாவது யான், யாம்

என்னும் பெயர்களின் எழுவாய் வடிவம், உருபேற்கும் வடிவம் ஆகியவை எல்லாத் திராவிட மொழிகளிலும் எவ்வாறு அமைகின்றன வென்று காண்போம்.

	யான்		யாம்	
	எழுவாய் வடிவம்	உருபேற்கும் வடிவம்	எழுவாய் வடிவம்	உருபேற்கும் வடிவம்
தமிழ்	யான்	என்	யாம்	எம்
மலையாளம்	—	என்	எங்-ஙள்	எங்-ஙள்
கன்னடம்	ஆனு	என்	ஆம், ஆவு	எம்
குடகு	—	என்	எங்-க	எங்-க
தோடா	ஓன்	என்	ஆம்	எம்
துளு	யானு, ஏனு	என்	யாங்-குளு எங்-க்ளு	யங்-குளே எங்-குளே
தெலுங்கு	ஏனு	—	ஏமு	—
கோண்டி	ஆனு, அன்னு	—	அம்ம்-ஆட்	—
கூயி	ஆனு	—	ஆமு	—
பெங்கோ	ஆன்	—	ஆப்	—
கோலாமி	ஆன்	அன்	ஆம்	அம்
நாய்கி	ஆன்	அன்	ஆம்	அம்
பார்சி	ஆன்	அன்	ஆம்	அம்
ஒல்லாரி	ஆன்	அன்	ஆம்	அம்
கடபா	ஆன்	அன்	ஆம்	அம்
குருக்	ஏன்	எங்க்	ஏம்	எம்
மால்டோ	ஏன்	எங்க்	ஏம்	எம்

தென் திராவிட மொழிகளில் எழுவாய்வடிவில் யகர மெய்யை அடுத்த ஆகாரம் நிலைபெறுவதை அன்றேல் ஏகாரமாகத் திரிவதைக் காணலாம். அம்மொழிகளின் உருபேற்கும் வடிவங்கள்.

'ஆ எ ஆகும் யாமென் இறுதி
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்' (தொ. எ. 181)

என்று தொல்காப்பியம் குறிப்பிடும் மாற்றத்தை அடைந்துள்ளன: யாம் > எம் : யான் > என். நடுத்திராவிட மொழிகளில் பிறயகரமெய் மொழி முதற்சொற்கள் அடைந்துள்ள மாற்றத்தினின்று வேறுபட்டு எழுவாய், உருபேற்கும் வடிவங்களில் யகரமெய்யை இழந்தபின்னர்

முறையே ஆகாரம், அதன் குறுகிய வடிவம் ஆகியன நிலைபெறுகின்றன. வடதிராவிட மொழிகளில் எழுவாய் வடிவில் ஏகாரமும் உருபேற்கும் வடிவில் எகரமும் நிலைபெறுகின்றன.

பழந்தமிழில் யான், யாம் என்னும் தன்மைப் பெயர்களிலும் துளுவில் 'யானு' என்னும் தன்மை ஒருமைப் பெயரிலும் மொழி முதல் யகரம் நிலைபெற்றுள்ளது.

யாவென் அடியாகப் பிறந்த வினாப்பெயர்கள் தமிழில் பல மாற்றங்களை அடைந்துள்ளன.

யாவன் > எவன் / ஏவன்.
யாவள் > எவள் / ஏவள்.
யாவர், யார் > யார் / எவர் / ஆர்.
யாது > யாது / எது / ஏது.
யாவை > எவை / ஏவை.
யா > எவ்.
யாங்கு > எங்கு.
யாங்கணும் > எங்கணும்.

தொல்காப்பியனார் யாவென் அடியாகப் பிறந்த பல வினாப் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். [எ-டு] யாவன், யாவள், யாவர், யாது, யாவை முதலியன. யா என்னும் வினாவிற்கு அவர் கொடுத்த சிறப்பிடம் எகர வினாவிற்குக் கொடுக்கவில்லை. ஓர் இடத்தில் மட்டும் எகரவினாவின் இகரவிறுதியும் (தொ. எ. 160) என்று கூறி யகரம் வினாவைச் சுட்டும் என்று தெளிவுபடுத்துகின்றார். இதற்கு உரையாசிரியர்கள் 'எதோளி' என்ற எடுத்துக்காட்டினைத் தருகின்றனர். தொல்காப்பிய இலக்கணம் எவன், எவள், எவர், எது, எவை போன்ற எகர அடிப்படையில் தோன்றிய ஐம்பால் வினாப்பெயர்களுக்கு இடம் தருதல் இல்லை. எனவே யா > எ / ஏ எனத் திரிந்த பின்னர் யாவென் வினா வழங்கிய பெரும்பாலான இடங்களில் எகர வினா ஆட்சி பெற்று விட்டது என்று கருதுவதில் இடர்ப்பாடு ஒன்றும் இல்லை. எனினும் யாவென் வினா அறவே மறைந்து போகவில்லை. அதுவும் வழக்கில் இடம் பெற்றுக் கொண்டுதான் இருந்தது. எனவேதான் பிற்கால இலக்கண நூலார் 'எ யா முதலும்' (நன். 67) என்று கூறி வினாப் பொருளைக் கொள்வதில் அவற்றை ஒப்பானவையாகக் காட்டினர்.

இனி வெவ்வேறு திராவிடமொழிகளில் வினுப்பெயர்கள் வழங்கும் வகையினைக் காண்போம்.

தமிழ் — யாவன், யாவள், யார், யாவர், யாவை, யா, யாது, ஆர், எது, ஏது, ஏன்.
மலையாளம்— யா, யாவன், யாது, ஆர்.
கன்னடம் — யா, யாவ, யார், யாதர், ஆ, ஆவ, ஏ, ஏதர்.
துளு — ஏரு.
குடகு — யேவு, யேவ, யேது. தெலுங்கு — ஏதி, ஏமி.
கூயி — ஏரு. பார்சி — ஏடா. கோலாமி — யேண்ட்,யேர்
நாய்கி — ஏன். குருக் — நே. மால்டோ. — ஏர்.
பிராகூயி — தேர்.

தமிழ், மலையாளம், கன்னடம்,குடகு, கோலாமி ஆகிய மொழிகளில் மட்டும் ஒரு சில வினுச்சொற்களில் யகரமெய் மொழிமுதற்கண் காணப்பெறுகின்றது. எனவே எல்லாத் திராவிட மொழிகளிலும் சில மொழிகளில் குறிப்பிட்ட சில இடங்கள் தவிர ஏனைய இடங்களில் சொற்கள் மொழி முதல் யகரத்தை இழந்துவிட்டன. இவ்வாறு மொழி முதல் அண்ணவின மெய்களை (Palatal-consonants) இழத்தல் திராவிட மொழிகளில் காணக்கிடக்கும் ஓர் இயல்பாகும்.

தென் திராவிடமொழிகளில் மொழிமுதல் யகரம் நிலைபெறுதலையும், அது மறைந்து ஆகாரமே நிலைபெறுதலையும் ஆகாரம் ஏ/எ ஆக மாற்றமடைதலையும் காண்கிறோம். நடுத்திராவிட மொழிகளிலும் வட திராவிட மொழிகளிலும் ஏகாரமே மொழிமுதலில் காணப்படுகின்றது.

முன்னர் கொடுக்கப்பெற்ற யகரமெய் மொழிமுதற் சொற்களை ஒப்பிட்டுப் பார்க்குங்கால் திராவிட மொழிகளில் ஆகாரம் ஏகாரம் ஆகியவை மாறிமாறி வருதலைக் காணலாம். அவை மாறிமாறி வந்தாலும் (alternate) பொருள் மாறுவதில்லை. இவ்வாறு வருதலை மொழியியலார் நடுநிலையாதல் (neutralization) என்பர். ஆகவே யகரமெய்க்குப்பின்னர் திராவிட மொழிகளில் ஏகாரம் ஆகாரத்திற்குச் சமனிலை ஒலியனுக (archiphoneme) அமைகின்றது எனலாம். திராவிட மொழிகளில் ஆ/அ என்னும் ஒலியன் ஏ/எ ஆக மாறி வருதல் ச், ஞ், ய் ஆகிய அண்ணவின மெய்களுக்குப் பின்னர் நிகழும் ஓர் இயல்பாகும்.

முடிவுரை: மொழிமுதல் யகரம் தென் திராவிட மொழிகளில் ஒரு சில இடங்களில் நிலைபெற்றுள்ளது. பழந்தமிழில் பல சொற்களிலும், துளுவில் தன்மையொருமைப் பெயரிலும் தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, கோலாமி ஆகியவற்றில் வினாப்பெயர்களில் சிலவற்றிலும் நிலைபெற்றுள்ளமையைக் காணலாம். மற்ற இடங்களில் எல்லாம் யகரமெய் மொழிமுதலில் மறைந்து போயிற்று. மொழிமுதல் யகரமெய்யை இழந்தபின்னர் தென் திராவிட மொழிகளில் பெரும்பாலான சொற்களில் ஆகாரமே நிலைபெற்றுள்ளது. ஆனால் அது தன்மைப் பெயர்களின் வேற்றுமை உருபேற்கும் வடிவங்களிலும், வினாப்பெயர்களிலும் மட்டுமே எகரமாகத் திரிந்துள்ளது. நடுத்திராவிட மொழிகளில் பெரும்பாலும் ஏகாரமே காணப்படுகின்றது. அவற்றின் தன்மைப்பெயர்களின் எழுவாய் வடிவங்களில் ஆகாரமும் உருபேற்கும் வடிவங்களில் அகரமும் அமைவதும் கருதத்தக்கது. வட திராவிட மொழிகளில் எல்லா இடங்களிலும் ஏகாரம் எகரம் அமைகின்றது.

மேலும் யகரமெய் ஆகார உயிருடன் இணைந்து மொழி முதற்கண் வருகின்ற சொற்கள் மட்டுமே திராவிட மொழிச்சொற்கள் எனவும் பிற உயிர்களுடன் இணைந்து அம் மெய் மொழி முதற்கண் வருகின்ற தமிழ்மொழிச் சொற்கள் எல்லாம் கடன்சொற்கள் எனவும் அறிகின்றோம். 0

0 மாந்தவியல் முடிபுகளும், மொழியியல் முடிபுகளும், இலக்கண இலக்கிய அகப்புறச் சான்றுகளும் கொண்டு உருவாக்கிய பண்டை வரலாற்றுக் கருவூலம்.

0 தமிழர் தம் கைகளில் மிளிரவேண்டிய நூற்செல்வம்!

தமிழர் வரலாறு

மொழிஞாயிறு: ஞா. தேவநேயப்பாவாணர், க. மு.

வெளிவந்து விட்டது: விலை உருபா: 12-50.

(பதிவஞ்சலில் வேண்டுவோர் 3 உருபா சேர்த்து விடுக்க.)

கிடைக்குமிடம்

தே. மணி

ஆ-1135-2-ஆம் மேற்குக் குறுக்குச் சாலை,

காட்டுப்பாடி விரிவு (அஞ்); வ. ஆ. மாவட்டம்.

கற்பனை ஊற்று தொடர்: 2-5

இல்லையும் இருக்கிறதும்.

மெய்ம்மைப்பித்தன்.

இல்லை என்று ஒன்று இல்லை!
இருக்கிறது என்றும் ஒன்று இல்லை!

இல்லையும் இல்லை;
இருக்கிறதும் இல்லை;
இருக்கிறதும் இருக்கிறது;
இல்லையும் இருக்கிறது;

இல்லாமலும் இருக்கிறது;
இருக்காமலும் இல்லை;

இல்லையும் இல்லாமல் இல்லை.
இருக்கிறதும் இல்லாமல் இல்லை.
இல்லையும் இல்லாமல் இருக்கிறது;
இருக்கிறதும் இல்லாமல் இருக்கிறது!

இல்லை இருக்கிறது இல்லை;
இருக்கிறது இருக்கிறது இல்லை!
இல்லாமல் இருக்கிறதும் இருக்கிறது;
இருக்கிறது இருக்கிறதும் இருக்கிறது;

இல்லை இல்லாமலும் இருக்கிறது;
இருக்கிறது இல்லாமலும் இருக்கிறது!
இல்லை இல்லாமலும் இல்லை.
இருக்கிறது இல்லாமலும் இல்லை.

இருக்கிறது இல்லை இருக்கிறது!
இல்லை இல்லை இருக்கிறது;
இருக்கிறது இல்லை இல்லை;
இல்லை இல்லை இல்லை;

இல்லை இல்லாமல் இல்லை இல்லை;
இருக்கிறது இல்லாமல் இல்லை இல்லை!
இல்லையும் இல்லாமல் இருக்கிறது இல்லை;
இருக்கிறதும் இல்லாமல் இருக்கிறது இல்லை!

இல்லை இருக்கிறது இல்லை இல்லை;
இருக்கிறது இருக்கிறது இல்லை இல்லை!
இல்லை இருக்கிறது இருக்கிறது இல்லை;
இருக்கிறது இருக்கிறது இருக்கிறது இல்லை!

இல்லை இல்லாமல் இல்லை இருக்கிறது.
இருக்கிறது இல்லாமல் இல்லை இருக்கிறது.
இல்லையும் இல்லாமல் இருக்கிறது இருக்கிறது.
இருக்கிறதும் இல்லாமல் இருக்கிறது இருக்கிறது!
இல்லை இருக்கிறது இல்லை இருக்கிறது.
இருக்கிறது இருக்கிறது இல்லை இருக்கிறது;
இல்லை இருக்கிறது இருக்கிறது இருக்கிறது.
இருக்கிறது இருக்கிறது இருக்கிறது இருக்கிறது!

இருக்கிறது இல்லாமல் இருக்கிறது இல்லை;
இல்லாமல் இல்லாமல் இருக்கிறது இல்லை,
இருக்கிறதும் இல்லாமல் இல்லையும் இல்லை;
இல்லையும் இல்லாமல் இருக்கிறதும் இல்லை.
இருக்கிறது இருக்கிறது இருக்கிறது இல்லை.
இல்லாமல் இருக்கிறது இருக்கிறது இல்லை,
இருக்கிறது இருக்கிறது இல்லை இல்லை;
இல்லை இருக்கிறது இல்லை இல்லை!

இருக்கிறது இல்லாமல் இருக்கிறது இருக்கிறது;
இல்லை இல்லாமல் இருக்கிறது இருக்கிறது;
இருக்கிறது இல்லாமல் இல்லை இருக்கிறது;
இல்லை இல்லாமல் இல்லை இருக்கிறது!
இருக்கிறது இருக்கிறது இல்லை இருக்கிறது;
இல்லை இருக்கிறது இருக்கிறது இருக்கிறது;
இருக்கிறது இருக்கிறது இருக்கிறது இல்லை!
இல்லை இல்லை இல்லை இல்லை!

இல்லை!
இருக்கிறது!

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம் உருபா	3-00	4-00	6-00
தனியிதழ் ,,	0-25	0-35	0-50

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

சாகத் துடிக்கிறேன்!

-மகிழை - பாவிசைக்கோ-

எடுப்பு

சாகத் துடித்தனன் நான்!
சாகத் துடித்தனன் காண்

தொடுப்பு

சாகத் துடித்தனன்; ஏனெனில் பீடுயர்
மானத் தமிழ்மகன் நான்!
ஈகப் புனல் உளந் தேநல் விடுதலைக்
காகத் திரிவதனால் (சாகத்)

முடிப்பு

நோகச் சுமந்தஎன் தாயின் பிணைப்பிலும்
நாட்டம் இலாதகன்றேன்,
வாகைத் திருமகட் கே இனி நான் மகன்
என்று விடைபுகன்றே,
வேகும் மனஎரி வேள்வியை மூட்டித் தற்
சார்பெனும் நெய் சொரிந்தே
ஏகிடும் ஓருயிர் எண்ணற்ற காவுகள்
ஏற்க வகைபுரிந்தே
சாகத் துடித்தனன் தாயுரி மை பறி
போகப் பொறுக்கிலனாய் (சாகத்)

ஆழக் கடல் மலை கான்வெளி யாவையும்
ஆளும் விழைவிருந்தும்
சூழும் பொருள் நலம் யாவும் எளிதினில்
துய்க்க வலுவிருந்தும்,
கூழும் இலாதுடல் காய்ந்து வருந்தி ஓர்
கொள்கைக் குழல்வதனால்
வாழப் பயின்றிலன்; போலிப் புனைவினை
ஏலற் கிசைகிலனாய்ச்
சாகத் துடித்தனன் மன்பதை மேம்படும்
வேலைத் தனங்களினால் (சாகத்)

கோலக் குயிலெனச் சோலைக் கிளியெனக்
கூவிப் பறந்து, மதி
போல நலஞ்செயும் பொன்மயில் பேட்டினைப்
பற்றி மணம் புணர்ந்தும்,
சோலைக் குளிரினில் கால்விலங் கோடு, து
றக்கம் நுகர்கிலனாய்
சாலத் துயரொடு நாடுவிட் டோடிச்
சவளும் வெறி பிடித்தே
சாகத் துடித்தனன் தன்னுரி மைகன
லாகப் பிறங்கியதால் (சாகத்)

ஆர்த்த முரசொடும் போர்ப்புறப் பாட்டொடும்
அன்னை விடுதலைக்கே
சேர்த்தஎன் ஆவி உ டல்பொருள் யாவையும்
தீர்த்து முடிப்பதலால்
போர்த்திற லற்றுவீண் பொய்ந்நிழல் சார்ந்தொரு
பொக்கைத் தமிழ் மகனாய்
வேர்த்துப் புழுங்கிவல் லாண்மைக் கதிர்வதோர்
வாழ்வென ஒப்பிலனாய்,
சாகத் துடித்தனன் தாய்நில மீட்பினுக்
காகக் கிடந்தலைந்தே (சாகத்)

* 'பாவை' என்னும் பெயரில் மீண்டும் நடையிடவிருந்த இதழ் 'வலம்புரி' என்னும் பெயரில் வெற்றி முழக்கமிடுகிறது.

"வலம்புரி"

ஆசிரியர்

புலவர் இறைக்குருவனார்

0 தமிழுக்கு ஆக்கமும் தமிழர்க்கு ஊக்கமும் அளிக்கும் செந்தமிழ்த் தாளிகை.

0 'பாவை' உறுப்பினர்கட்குத் தொடர்ந்து இதழ்கள் விடுக்கப்பெறும்
தனியிதழ் 0-25 காசு ஆண்டுக்கட்டணம் 3 உருபா

விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க.

வலம்புரி

(திங்களிதழ்)

மதுரை-10.

இலக்கியம் பயிற்றுவிப்பது எப்படி?

பேரா. தாயம்மாள் அறவாணன், க.மு.

தன்னேரில்லாத் தமிழ்த் தாயின் இணையடி நீழலில் அன்று தொட்டு இன்று வரை குவிந்த இலக்கியங்கள் பற்பல. இருக்கின்ற இலக்கியங்களைக் கழக இலக்கியம், பத்தி இலக்கியம், பாவிய இலக்கியம், பிற்காலத்து இலக்கியம், இக்காலத்து இலக்கியம் என வகைப் படுத்தலாம்.

பல்வேறு காலங்களில் வெவ்வேறு சூழலில் பிறந்தவை ஆதலால் இலக்கியம் சொல்கின்ற முறையும் சற்று மாறுபடும். முழுதும் மாறுபடாது. எடுத்துக் காட்டாக "யாயும் ஞாயும் யாரா கியரோ" எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலுக்குப் பொருள் சொல்லும் முறை வேறு; "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்ற புரட்சிப் பாவலரின் பாடலுக்குப் பொருள் சொல்லும் முறை வேறு. கழகப் பாடலில் பொருள் விளக்கம் பெறுவது அரிதாய் இருக்கும்; இக்காலப் பாடலின் பொருள் விளக்கம் எளிதாய் இருக்கும். ஆதலின் எடுத்துக் கொண்ட இலக்கிய வழி, எடுத்துரைக்கும் முறை மாறுபடும். இலக்கியம் கற்பிப்போன், இந்த நிலையை நன்கு உணர்தல் வேண்டும். இன்றேல் அவன் முயற்சி தோல்வியுறும்.

கழக இலக்கியங்களில், பெரும்பாலும் இயற்கையூடு கலந்த தன்மையையும், சொல்லழகில் வீழ்ந்து படாத பாங்கையும் காணலாம். பத்தி இலக்கியங்கள், இறைவனையே நடுவாக, எண்ணற்ற பின்புலக் கதைகளைக் கொண்டவை. பாவியங்கள், இயற்கை, எடுத்துக் கொண்ட வரலாறு அல்லது கதை, பின்னணி ஆகியவற்றோடு பின்னி வருபவை. பிற்காலத்து இலக்கியங்கள் பெரும்பாலும் இறைவனை அல்லது அரசனைச் சார்ந்து வருபவை. இக்கால இலக்கியங்கள், அரசியல், மொழி தொடர்பாகப் பேசுபவை. இவை அனைத்துமே தமிழ் இலக்கியப் பெட்டியில் உள்ளவைதாம். இலக்கியம் எழுந்த சுற்றுச் சூழ்நிலைகளை உணராதவன், பல செய்திகளை எடுத்துச் சொல்ல இயலாது. ஆதலின் இலக்கியம் கற்பிப்போன், அஃது எழுந்த சூழலை முதற்கண் உணர்தல் வேண்டும்.

அடுத்து, கற்பிப்போன், கற்போனின் கல்வி, பருவ வேறுபாடுகளைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். கேட்போனின், அறிவு நிலை கொண்டுதான் கற்பிப்பதும் அமைய வேண்டும். இன்றேல் கேட்போன் ஏற்றுச் செரிக்க இயலா நிலைக்கு ஆளாக்கப் பட்டுவிடுவான். தொடக்க நிலைப் பள்ளி மாணவனுக்குத் தொல்காப்பியம் கற்பிப்பதோ, முது நிலை மாணவனுக்கு ஔவையின் ஆத்திசூடி உரைப்பதோ ஆகாது. தரந் தெரிந்து கற்பிக்கப்படும் இலக்கியமே, கேட்போனின் நெஞ்சை ஈர்க்கும்.

இலக்கியம் கற்பிப்போர் தாம் கற்ற அனைத்தையும் ஓரிடத்திலேயே, குறைந்த காலத்திலேயே எடுத்துச் சொல்ல எண்ணுதல் கூடாது. தமிழ் இலக்கியம் கற்பிப்போர் இந்த நிலைக்குப் பெரிதும் உள்ளாகக் காண்கிறோம். இதனால் இருவருக்கும் பேரிழப்பு. குழந்தையை வளர்க்க எண்ணும் தந்தை சிறிது சிறிதாகத்தான் குழந்தையை வளர்க்க முடியுமே ஒழிய, ஒரேயடியாக விரைவில் வளர்த்து விட எண்ணி, பலநாள் உணவை ஒருநாள் ஊட்டினால் குழந்தைக்கு நோயே ஒழிய வளர்ச்சியில்லை. அது போல இலக்கிய ஆசிரியரின் முழுமையும் கொட்டி மெழுகுதல் ஆகாது.

தமிழ்மண்ணில், தற்போது, இலக்கியம் கற்பிப்பது என்பது பொருள் கூறல் என்ற அளவிலேயே நின்று விடுகிறது. இலக்கிய வீட்டின் கதவுகளைத் திறந்து விட்டுவிட்டு, இலக்கிய ஆசிரியன் விடை பெற்று விடுகிறான். உள் வீட்டில் உள்ள பல்வேறு அறைகளை, அழகுப் பொருள்களைக் காட்டத் தவறி விடுகிறான். இதனால் கற்போரும், இலக்கிய வாயில்களைத் தெரிந்து கொண்ட மட்டில் அறிந்ததாக எண்ணி அமைதி கொண்டு விடுகின்றனர். இந்நிலை மாறுதல் வேண்டும்; அல்லது விரைவில் மாற்றப்பட்டாக வேண்டும்.

பாட்டு அல்லது இலக்கியம் என்று எடுத்துக் கொண்டால் பொருள் சொல்வது கற்பிப்பதின் ஒரு கூறே ஆகும். பொருள் அறிநிலையை அடுத்துப் பொருள் அழகு நிலை, பொருள் ஆழ நிலைகள் உள்ளன. இத்தனையும் தெளிவுறத்தப் பட்டாற்றான் இலக்கியம் உணர்த்தல் முழுவடிவு பெறுகிறது.

இலக்கியத்தைப் படித்தல் வேறு; இலக்கியத்தைப் படிப்பித்தல் வேறு. படித்துணர்தல் எல்லார்க்கும் இயலக்கூடிய நிலை

படிப்பித்தல் எல்லாராலும் இயலக் கூடிய துறை அன்று. படிப்பதைக் காட்டிலும், படித்த அதனைப் பயிற்றுவிக்கப் பன்மடங்கு அறிவு வன்மை வேண்டும். தமிழ் இலக்கிய வட்டத்தில் உணர்த்த இயலா, படித்த சான்றோர் பலர் உளர். எடுத்துக் கூறும் வன்மை (Teaching capacity) இன்மையால் இடருறுவோர் எண்ணிலர். இலக்கியம் கற்போனின் அறிவு நெஞ்சம் உணருமாறு, கற்பிப்போன் உணர்த்தியாக வேண்டும். விளக்கிச் சொல்லி, விளங்க வைத்தல் இன்றியமையாதது.

பொருள் கூறி விளங்க வைக்கும் நிலைகள் பல. இலக்கிய நுணுக்கத்தைத் துணை நிகழ்ச்சிகள் மூலமாக, சிறுகதைக் குறிப்புகள் வழியாக, எளிதான உவமைகள் வாயிலாக எடுத்துரைத்தல் பொருத்தமானது.

"இன்றே போல்க நும் புணர்ச்சி" – என்ற புறநானூற்றடி மிகப் பொருள் செறிந்த ஒன்று.

"உங்களுடைய நட்பு இன்று போல என்றும் இருப்பதாக" என்பது அடியின் பொருள். பொருளைக் கூறி விட்டு, நின்று விடாது, நட்புக் குலைவின் தீங்கு பலவற்றை எடுத்துக் கூறல், நட்புச் செறிவின் இன்ப நலங்களை விளங்கச் சொல்லல் – ஆகியவை பொருளை விளங்க வைத்தலின் பாற்பட்டது.

நட்புக் குறைவால் நேர்ந்த பாரி வேந்தனின் வீழ்ச்சி, பிற உலக வரலாற்று நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறித் தெளிவு படுத்தலாம். பின் சொல்லழகு, பொருளழகு இவற்றை எடுத்துக் காட்டலாம். தமிழ் இலக்கியம் கற்பிக்கப்படும் வழி இவ்வாறு இருக்குமானால் – தமிழ் இலக்கியம் கற்போரிடம் போதிய தெளிவை எதிர்பார்க்கலாம்.

இதுவரை கூறியவற்றிலிருந்து, இலக்கியம் கற்பிப்போன், அது தோன்றிய சூழலை உணர வேண்டும் என்பதையும், கற்போனின் கல்விப் பருவ நிலைகளை அறிந்திருத்தல் வேண்டும் என்பதையும், மிகுத்துச் சொல்லல் கூடாது என்பதனையும், பொருள் கூறி நிறுத்தல் ஆகாது என்பதனையும் உணர்ந்தோம். 0

"அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ-முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!"

தமிழருவி

ஆசிரியர் : பாவலர். திரு. முல்லைவாணன்.

கிடைக்குமிடங்கள்

தென்மொழி	V. Kaliyaperumal
கடலூர்-1	(Mullaivanan)
தெ. ஆ. (மா. வ.)	121, Anson road
தமிழ்நாடு	Singapore - 2

விலை: உருபா. 4—00

தமிழ், நாடு, நினைவில் நிற்போர், இயற்கையெழில், மகளிர் அரங்கம், காதல், பள்ளிப்பறவைகள், எண்ணச் சிலிர்ப்பு, பன்மணித் திரள் ஆகிய தொண் பாலாகப் பாகு படுத்தப் பெற்ற, தொண்ணூற்றெண்வகைத் தலைப்புகளில் இயற்றப்பெற்ற பாடல்களின் தொகுப்பே இந்நூல்.

இதன்கண், பாக்கள், பாவினங்கள், இசைப்பாக்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. பாடல்கள் யாவும் இனிய ஓசை நலமும், நல்ல சொல்லாட்சியும், விழுமிய கருத்துகளும் கொண்டு விளங்குகின்றன. அயன்மொழிக் கலப்பற்ற ஆற்றொழுக்கான எளிய தமிழ்நடை மிளிர்கின்றது. இசைப்பாக்கள் இசையரங்குகளில் முழங்கத் தக்கன. தமிழருவி தமிழுக்குப் புத்தாக்கம்; தமிழர்க்கு எழுச்சியூட்டுந் திறத்தது.

பாவலர் முல்லைவாணன் அவர்களின் புதுமை வேட்டல், நுண்ணோக்கு, தனித்தன்மை, உவமை நலம், சொற்சுருக்கம் ஆகியவற்றுக்குச் சோற்றுப்பத வழக்காகக் கீழ்க்காணும் எடுத்துக் காட்டுகளைத் தரலாம்.

ஒரு 'தென்மொழி'ச் செய்தித் திருத்தம்.

நான் சென்ற சில இடங்களில், என்னைக் கண்ட தமிழன்பர் சிலர், "புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றத்தார் தங்கள் செ. சொ. பி. அ. வெளியீட்டுத்திட்டத்திற்கு 10,000 உருபா வழங்கியது மிகப் பாராட்டத்தக்கது". என்று மகிழ்ச்சியுடன் கூறினர்.

நான், "அவர்கள் இன்னும் ஒரு தொகையும் வழங்கவில்லை. 4000 உருபாவை வட்டிக்கு விட்டிருக்கின்றனர். அத்தொகை 10,000 ஆகப் பெருகியவுடன் ஐந்தாண்டிற்குள் அளித்து விடுவதாக உறுதி கூறியிருக்கின்றனர். இது 'தென்மொழி" 8-ஆம் சுவடி 10-ஆம் ஓலையில் வெளிவந்துளது. அதைப்பார்க்க" என்று சொன்னேன்.

அவர்கள், "இல்லை. "இதுநாள் வரை வழங்கிய குறிப்பிடத் தக்க நன்கொடைகள்" என்னுந்தலைப்பில், "உலகமொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியீட்டுத் திட்டத்திற்கு உருபா. 10,000," என்று 'தென்மொழி' 9-ஆம் சுவடி 8-ஆம் ஓலையில் வெளி வந்துவிட்டதே! அதை எவரும் இதுவரை மறுக்க வில்லையே! அதுபற்றிய அறிக்கையும அன்றே பலர்க்கும் அனுப்பப்பட்டுள்ளதே!" என்று வியப்புடன் தெரிவித்தனர்.

அதன்பின் அத் 'தென்மொழி' யிதழை எடுத்துப் பார்த்து, அவர்கள் கூறியபடியே யிருக்கக்கண்டு திடுக்கிட்டேன். இது தவறான செய்தியாதலால், பொறுப்பு வாய்ந்த பு. பு. பட்டி மறைமலை யடிகள் மன்றத்தார், அடுத்த 'தென்மொழி' யிதழில் இதைத் திருத்தி வெளியிடுவார்களென்று நம்புகின்றேன்.

ஞா. தேவநேயன்.
உஅ, மீனம், உ௰௯௱.

(முன்பக்க தொடர்ச்சி)

"கற்றாழைக் குருத்துக் கொம்பு" (மாட்டுக்கு)
"பூனைக்கால் உகிர்போல் மூக்கு" (சிட்டுக்கு)
"மொசுக்கட்டைப் புருவம்" (குரங்குக்கு)
"மின்மினி செறித்து வேய்ந்த மாலைபோல்" (வானவில்)
"நாவற்கனி வண்டு"

மொழியியல் ஞாயிறு. திரு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் அணிந்துரையும், பாவலர். திரு. பெருஞ்சித்திரனார் அவர்களின் மதிப்புரையும் நூலுக்கு எழிலூட்டுகின்றன. —கடுங்கோ.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

சில கலைச்சொற்கள்

இல. க. இரத்தினவேல்.
(பூதநூல் விளக்குநர், பெரியார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி)

1. 13. Radium — ஆரயம் (88)
1. 14. Radon — ஆரகன் (86)

இ. வே: L. radius

த. மூ: ஆர்

ஆர் தல் = பொருந்துதல்

ஆர் = சக்கரக் குறட்டிலும் வட்டையிலும் பொருந்தும் சட்டம்-
ஆரக்கால் (Spoke, radius)

ஆர்கெழு குறடுசூட் டாழிபோன்று (சீவக. 828)

ஒரு நடுவகத்தில் அல்லது மூலத்தில் இருந்து விரியும் கால்கள், ஒளிக்கதிர்கள் முதலியவற்றையும் ஆர்—ஆரை—ஆரம் என்ற சொற்கள் குறிப்பன.

குறட்டினின்று (குடத்தினின்று) கதிர் போற் செல்லும் ஆரக்காற்கும், ஒளிக்கதிர்க்கும், ஆரக்கால் போல் நெடுகக் கிளைக்கும் பயிர்க்கதிர்க்கும் "கதிர்" என்னும் பொருளுண்மையையும் காண்க.

ஆர் — (ஆரை) - ஆரம் > L. radius
(= arod, spoke, ray)

ஒ. நோ: அரத்தம்—L. rufus

கதிர்வீச்சுடைய தனிமம் ஆரயம் (Radium) ஆம்.

Radon = Radium emanation இதனை ஆரகன் எனலாம்.

இவ்வழியே,

Radius—ஆரம்
Radian—ஆரன்
Radiation—ஆர்ப்பு, என்க.

1. 15. Calcium—காளம் (20)
1. 16. Kalium—காளியம் (19)

இ. வே: L. Calx

த. மூ: காள்—காளம் = சுடுகை
—காளவாய் = சுண்ணும்புச்சுள்ளை

காள் > L. Calx, Calcis, Calcination (-burning)
> L. Kalium

எனவே. **Calcium** காளம் எனவும், **Kalium** (-Potassium-19) காளியம் எனவும் வழங்கட்டும்.

காள்—காளம் = வெப்பம்

> L. Calor, E. Calorie

Calorie என்பதைக் காள் எனலாம்

காள்—காய் > Caustic

—காய்மை—Causticity

காள்—காய்—(காய்ந்து)—காந்து—காந்தி > E. Candle

மிகுந்து ஒளிவிடும் விளக்கைக் 'காந்த விளக்கு' என்பது உலக வழக்கு.

காந்தி = Candela

1. 17. Fluorine—வழியகை (9)

இ. வே: L. fluo

த. மு: வழி > L. fluo, E. flow, flux.

வகரம் பகரமாதல் வழக்கே.

ஒ. நோ: விறை—freeze
விட்டில்—beetle
வெட்டம்—photos

எனவே fluorine-ஐ வழியகை என வழங்கலாம்.

1. 18. Barium—பாரியம் (56)

இ. மு: Gk. barys

த. மு: பரம், பாரம்—Gk. barys (heavy)

பாரியம் ஒரு பாரம் (நிறை) மிக்க மாழை தான்!

1. 19. Arsenic—அரசனியை (33)

இ. மு. Gk. Arsen

த. மு: அரசு, அரசன் [=ஆண்]

ஆணை அரசு எனக்கூறும் வழக்குமுண்டு. உனக்கோர் அரசு பிறக்கும். [உ. வ.]

மேலை நாட்டுப் பண்டையர் மாழைகளைப் பாற் பகுத்த பழங் கோட்பாட்டினின்றும் பிறந்தது.

1. 20. Technetium—தச்சியம் (43)

இ. மூ: Gk. technetos

த. மூ: தச்சு

தச்சு, நெசவு போன்ற இணைப்புச் செயற் கலையினின்றும் செயற்கைப் பொருள் பிறக்கும்.

தச்சு > L. texere

> Gk. techne (=art). technetos (=artificial)

இணைப்புப் பொருளில் பிறந்ததே, Tissue-வும்

தச்சு > L. texere > E. Tissue

1. 21. Magnesium—மகனீசியம் (12)

1. 22. Manganese—மாங்கனியம் (25)

இ. மூ: L. Magnus, Magnesia

த. மூ: மகு—மகம் = பருமை, பெருமை

—மகம்—மக—மா = பெரிய

மகம் > Gk. Megas, L. Magnus

பார்க்க. E. Magna Carta

மகம்—மகன் = பெரியோன், சிறந்தோன்

தெசாலிய மகனூரால் (Thessalian Magnates) நிறுவப் பெற்றது மகனிசியா (Magnesia). மகனிசியாவிற் கிடைத்த பொருளிலிருந்து பிரித்த தனிமம் மகனீசியம் (Magnesium). இங்கே கிடந்த "கவர்கல்"லான காந்தமும் "மாக்னட்" (Magnet) எனப் பெற்றது. இச்சொல்லிலிருந்து உதிர்ந்ததே மாங்கனியம் (Manganese)-உம்.

Mega (10^6) என்ற முன்னொட்டைத் தமிழில் மா அன்றி மக என்ற முன்னொட்டாற் குறிக்கலாம்.

1. 23. Gallium—கோழியம் (31)

இ. வே: Lecoq or L. Gallia

த. மூ: கோழி [பொதுப்பெயர்] > L. Gallus

"கொக்"கரக்கோ—Cock [Onomatopoeia]

—Lecoq

கோழிக்கோடு [கோழிக் கூடு] என்று ஊர் இருப்பதையும், "கோழியூர்" என்று ஊரிருந்ததையும் நோக்க, Gallia [=பிரான்சு] என்பதும் புதுமையன்று.

இங்ஙனமே, விலங்குநூற் கோழி வடிவும் [Galliforme] என்க.

1. 24. Vanadium—வனப்பியம் (23)

இ. வே: Vanadis

த. மூ: வனப்பு

'காமர் வனப்பினள்' ஆன சிறு தெய்வத்தின் [Vanadis] பெயரிலான தனிமம் வனப்பியம் எனப்படல் பொருத்தமே!

1. 25. Zirconium—சொற்குணியம் (40)

இ. வே: Ar. Zargun

த. மூ: சொல்+குணி

சுல்—சொல்

சொல்=பொன் போற் பொலிதல்

குணம்—குணி=வண்ணம்

"வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையினொன்
றன்ன பிறவும் தன் குணம்" [தொல்]

சொற்குணி=பொன்வண்ணம்

சொற்குணி > Arabic & Persian Zargun.

1. 26. Osmium—வாசமியம் (76)

இ. வே: Gk. Osme

த. மூ: வாசம்

வீசு—வீச்சம்

வீசு—வாசு—வாசம் > Gk. Osme

1. 27. Phosphorus—பொசுப்பொறை (15)

இ. வே: Gk. Phos + Phoros [Pherein]

த. மூ. பொசு[?] + பொறை

தமிழில் எரிதலைக் குறிக்கும் 'பொசு' என்ற முதனிலையோ, அன்றி ஒளிர்வுக் குறிப்பான 'பள்' [பளிர்] என்ற சொல்லோ கிரேக்கத்தில் ஒளியைக் குறிக்கப் 'Phos' என்ருகியிருக்கலாம்.

தமிழ். பொறு > Gk. Phero, L. fero, E. bear

எனவே 'ஒளியேந்தி'யான Phosphorus, பொசுப்பொறை எனப் பெறலாம்.

1. 28. Oxygen—உயிரியை [அஃகீன்] [8]

இ. வே: Gk. oxy + gen

த. மு: அஃகு + ஈன்

அஃகு > Gk. oxy

ஈன் > E. yean, Gk. gennaein, E. gene

இனம்—genos, E. gene

Oxygen, 'அஃகு' வழி வந்ததாயினும் அதனை 'அஃகீன்' என்னாது, பொருட் பொருத்தம் நோக்கி உயிரியை எனவே வழங்குக.

இவ் வழியில் மரபி [gene]யை 'ஈனி' என்க.

1. 29. Alloy—அளை

இ. வே: F. Alai

த. மு: அளை

அளை—அளைதல் = ஒன்று சேரக் கலத்தல்

—F. Alai, E. Alloy ≈ a mixture of metals.

1. 0. Chemistry—இயைபு நூல்

இதுவரை கண்ட சொற்கள் பெரும்பாலும் இயைபியலின் [வேதியல்] பாற்பட்டவை.

"Chemistry is the study of the composition" of substances and the changes of composition, they undergo" [C. Tech. D.] என்ற வரையறைப் படி இயைபு நூல் எனப் பெற்றது.

மற்று, Chemistry என்பதற்கான வேர்ச் சொல் Alchemy. இதன் அராபிய மூலச்சொல் al-Kimia ≈ The Kimid. KIMID ≈ Black. land ≈ Egypt. எகிபது நாட்டுப் பொன்னுக்கக் கலையினின்றும் இவ்வாறு திரிந்ததாம்! [தொடரும்]

கூட்டல்

-உணர்வேந்தி.

முன்தொடர் திராக்டென் பெர்க்குவின் கூட்டன் முறையைக் கற்பித்தது. இந்தத் தொடரில் கூட்டலின் சரிபார்ப்புக்கும், இரட்டைச் சரிபார்ப்புக்கும், உரிய வழிகளை அறிவோம். இந்த முறையின் சிறப்பியல்புகளும் இதிற் சுட்டப் பெறும். மேலும், இதனீற்றில், திராக்டென்பெர்க்குவின் கூட்டலை ஒருபுடை யொத்த இன்னொரு கூட்டன் முறையும் அறிமுகப்படுத்தப் பெறும்.

ஒவ்வோர் எண்ணிலுள்ள எண்ணுருக்களின் குறுக்குக் கூடுதலை அந்த எண்ணின் உருக் கூடுதல் என்க. இது பெரும்பாலும் இரட்டை [ஈருரு] எண்ணாகவே இருக்கும். இதன் எண்ணுருக்களையுங் கூட்ட, வருமெண் ஒற்றை யெண்ணாக இருக்கும். மாறாய், இதுவும் இரட்டை எண்ணாய் இருக்கின், இதன் உருக் கூடுதலையும் காண்க. அஃதாவது, உருக் கூடுதல் ஒற்றை யெண்ணாக் குறையும் வரை யதனைத் தொடர்ந்து கணக்கிட வேண்டும். இவ்வாறு இறுதியில் வரும் ஒற்றை யெண்ணைக் கொடுக்கப்பட்ட எண்ணின் குறையெண் என்க.

காட்டு: 43, 87, 652—இன் குறையெண் என்ன?

இதன் உருக் கூடுதல் $= 4+3+8+7+6+5+2 = 35$

ஆதலின், குறையெண் $= 3+5 = 8$.

ஆக, 43, 87, 652—இன் குறையெண் 8-என அறிக.

இவ்வாறுகும் குறையெண்ணும், கொடுக்கப்பட்ட எண்ணை 9-ஆல் வகுக்கக் கிடைக்கும் மீதியும் ஒன்றே. ஐயமிருப்பின், 43, 87, 652-ஐ 9-ஆல் வகுக்க. மீதி 8 [இங்கு நாம் ஈவைப் பற்றிக் கவல்வதில்லை என்பதறிக.] இதுவும், மேலே வந்த குறையெண்ணும் ஒன்றே யாதற் காண்க. ஆகவே, ஓரெண்ணின் குறையெண் காணலும், அதனை 9-ஆல் வகுத்து மீதி காணலும் முடிபொத்த செயல்கள் என்றறிக. இவ்வாறு ஓரெண்ணை ஒன்பதால் வகுக்கக் கிடைக்கும் மீதியை ஒன்பதின் மீதி என்க. ஒன்பதின் மீதி காணலில் 9-உம் 0-உம் ஒன்றிற்கொன்று சம மென்பதறிக.

இவ்வாறு ஒன்பதின் மீதி காணல் பேரெண்கட்கு மட்டும் உரியதன்று. பல எண்களின் கூடுதற்கும் ஒன்பதின் மீதி காண முடியும். காட்டாக, 2; 5; 4; 3; 8; 9; 7; 1; 6 ஆகிய எண்களின் கூடுதற்கும் ஒன்பதின் மீதி காண முடியும். இந்த எண்களின் கூடுதலை ஒன்பதால் வகுக்கக் கிடைக்கும் மீதியே இவற்றின் ஒன்பதின் மீதி எனப்படும்.

ஒன்பதின் மீதியை இன்னு மெளிதாகவும் காண முடியும். ஒன்பதின் மீதியைக் காணக் கொடுக்கப்பட்ட எண்கள் அனைத்தையுமே கூட்ட வேண்டும் என்பதின்று. அந்த எண்களுள் இருக்கும் 9-களையும், கூட்டினுல் 9 அல்லது 9-இன் மடங்காகக் கூடிய எண்களையும் கூட்டவே வேண்டியதில்லை. ஏனெனில், இவற்றை இவ்வாறு விட்டுவிடுவதினுல் எந்த இழப்பும் ஏற்படுவதுமில்லை; விடையும் மாறுவதில்லை. [இதனைக் கீழிருக்கும் எடுத்துக் காட்டு மூலம் அறிந்து கொள்க.] இவ்வாறு ஒதுக்கப்படக் கூடிய எண்களை விடுத்து, எஞ்சியவற்றை மட்டுங் கூட்டிக் கொள்க. இந்தக் கூடுதலின் ஒன்பதின் மீதியே கொடுக்கப் பட்ட எண்கள் அனைத்திற்குமான ஒன்பதின் மீதியாம். இங்கு, இந்தக் கூடுதலின் ஒன்பதின் மீதியைக் காண, அதனை ஒன்பதால் வகுக்கத்தான் வேண்டுமென்பதில்லை. மாருக, இதன் குறையெண்ணைக் கண்டு கொண்டாலே போது மென்க.என்னை? ஓரெண்ணின் குறையெண்ணும், ஒன்பதின் மீதியும் ஒன்றே என்பதை முன்னரே நிறுவியிருக்கின்ருே மாதலின் என்க. இவ்வாறு கிடைக்குங் குறையெண்ணே நமக்குத் தேவையான ஒன்பதின் மீதி.

காட்டு: 9; 5; 4; 4; 7; 6; 7; 9; 5 — ஆகியவற்றின் ஒன்பதின் மீதி யென்ன?

இங்கு இரண்டு 9 இருக்கின்றன. இவ் விரண்டனையும் கூட்ட வேண்டுவதில்லை. ஓர் 5-உம், ஒரு 4-உம் கூடி, 9-ஆம். ஆதலின் இவற்றையுங் கூட்ட வேண்டுவதில்லை. இரண்டு 7-உம், ஒரு 4-உம் (அதாவது $7+7+4$) சேர்ந்து 18 [அதாவது, 2×9]ஆம். இது ஒன்பதின் இரு மடங்காதலின், இவ் வெண்களையும் [7, 7, 4-உம்] விட்டு விடலாம். இவ்வாறு, கொடுக்கப்பட்ட எண்களுள் 9, 5, 4, 4, 7, 7, 9 ஆகியவற்றை விட்டுவிட்டு, எஞ்சிய 6, 5 என்ற இரண்டை

மட்டும் கூட்டுக. இவற்றின் கூடுதல் 11, இதன் குறையெண் 2[=1+1]. இதுவே 9; 5; 4; 4; 7; 6; 7; 9; 5 — ஆகியவற்றின் ஒன்பதின் மீதியாம்.

மேலுள்ள எண்களின் கூடுதலை ஒற்றையெண்ணாய்க் குறைத்துக் கொண்டோமன்றோ? இதனை இறுதியிற்றான் செய்ய வேண்டுமென்பதின்று. எண்களைக் கூட்டி வருகையிலேயே இவ்வாறு குறைத்துக் கொள்ளலாம். காட்டாக, 7, 6, 1, 9, 8, 1, 9, 6 – ஆகியவற்றிற்கு ஒன்பதின் மீதி காண வேண்டுமெனக் கொள்க. இங்கு 1, 9, 8, 9 ஆகியவை ஒதுக்கப்படக் கூடிய எண்கள். ஆகவே இவற்றை விடுத்து, எஞ்சிய 7, 6, 1, 6 ஆகியவற்றைக் கூட்ட 20 வரும். இதன் குறையெண் 2. இவ்வாறு இறுதிவரைக் காத்திராமல், கூட்டும் போதே குறைத்துக் கொள்ளலாம். 7-உடன் 6-ஐக் கூட்ட, 13-ஆம். இதனை ஒற்றையெண்ணாய்க் குறைக்கக் குறையெண் 4. பின் இந்த 4-உடன் கூட்டலைத் தொடர்க. தொடரவே, 4+1, 5-ஆகும்; 5+6, 11 ஆகும். இதன் குறையெண் 2. இந்த எண்ணும் இப் பத்தியின் முற்பகுதியில் கிடைத்த எண்ணும் ஒன்றாகவே இருத்தற் காண்க. இவ்வாறு, கூட்டெண் இரட்டையெண்ணாகிடின் அப்படி ஆனவுடனேயே அதனை ஒற்றையெண்ணாக்கிக் கொள்வதால், நாம் சிறிய எண்களை மட்டுமே கூட்ட வேண்டியவராகின்றோம். இதனாற் கூட்டலும் எளிதாகின்றது என்பதறிக. ஆக, ஒன்பதின் மீதி யென்பது ஓர் எண் அல்லது எண்களின் கூடுதலின் குறையெண்ணே எனத் தெளிக. இவ்வாறு ஒற்றையெண்ணாக்கலும் ஒன்பதின் மீதி காணலும் பின்வரும் திராக்டென்பெர்க்குவின் சரிபார்ப்பு முறையில் பயன்படுத்தப் படும்.

விடையைச் சரிபார்த்தலில் ஈடுபடு முன்னர், திராக்டென் பெர்க்குவின் கூட்டன் முறையைச் சுருங்கக் காண்போம். இம் முறையில் எண் வரிசைகள், செயலட்டவணை, விடை என மூன்று உருப்படிகள் இருக்கின்றன. கொடுக்கப்பட்ட எண்கள் எண் வரிசைகளை உருவாக்கும், செயலட்டவணை என்பது சுருக்கக் கூடுதலையும் குறிக்கூடுதலையும் கொண்ட உருப்படி. இவ் விரு கூடுதலையும் 'ட' வடிவிற் கூட்ட வருவது விடை. ஆக, எண் வரிசைகளிலிருந்து செயலட்டவணையையும், செயலட்டவணையிலி ருந்து விடையையும் பெறுகின்றோம்.

கூட்டலைச் சரிபார்க்க மேற்கிளத்திய மூவுருப்படிகளையும் பயன்படுத்துகின்றோம். ஒவ்வோர் உருப்படிக்கும் சரிபார்ப்பெண்ணைக் கணக்கிட்டு, அச் சரிபார்ப்பெண்களில் ஒன்றைப் பிறிதொன்றனுடன் ஒத்துப் பார்ப்பதன் மூலம் கணக்கு சரிபார்க்கப்படும். ஒத்துப் பர்க்கப்படும் சரிபார்ப்பெண்கள் இரண்டும் உடன்படின், கூட்டல் சரி. அல்லாக்கால், தவறு. அஃதாவது கூட்டலில் எங்கோ தவறேற்பட்டிருக்கின்றது. திராக்டென்பெர்க்குவின் முறையில் 'எங்கோ' என்னும் பொதுமைநிலை கடிதின் மாறி 'இங்கே' என்னுங் குறிப்புநிலை ஒல்லை ஏற்பட்டு விடும். அஃதாவது, கூட்டலைத் திரும்பச் செய்யாமலேயே தவறாகக் கூட்டப்பட்ட வரிசை எதுவென்பதை உடனடியாகக் கண்டு கொள்ள முடியும்.

மூவுருப்படிகளைச் சரிபார்க்க வேண்டியிருத்தலான், சரிபார்த்தலிலும் முப்படிகள் இருக்கின்றன. முதற்படியில், தனித்தனியே ஒவ்வொரு வரிசைக்கும் சரிபார்ப்பெண் காண்கின்றோம். இரண்டாம்படியில், செயலட்டவணைக்கு ஒரு சரிபார்ப்பெண்ணைக் கணக்கிடுகின்றோம். மூன்றாம் படியில் விடைக்கு (கூடுதலுக்கு) ஒரு சரிபார்ப்பெண் காண்கின்றோம்.

முதற்படி:- இதில் ஒவ்வொரு வரிசைக்கும் ஒரு சரிபார்ப்பெண் காண்கின்றோம். ஒவ்வொரு வரிசையாய்த் தனித்தனியே எடுத்துக் கொள்க. பின் அதிலுள்ள எண்கட்கான ஒன்பதின் மீதியைக் கணக்கிடுக. இம் மீதியே அவ் வரிசைக்குரிய சரிபார்ப்பெண்ணும். ஒன்பதின் மீதியைக் காண்கையில், 9, கூட்டினால் 9 அல்லது ஒன்பதின் மடங்காகும் எண்கள் ஆகியவற்றின் கீழ் அடிக்கோடிட்டுக் கொண்டு, முன்னர்க் கிளத்தியவாறு அவற்றைக் கூட்டலினின்று ஒதுக்கி விடுக. இப்படிச் செய்கையில் சில எண்கள் நம் பார்வையிலிருந்து தப்பிவிட நேரிடலாம். அப்படி யவை தப்பினும் இறுதியில் கிடைக்கும் ஒன்பதின் மீதி மாறுவதில்லை யென்பதைச் செயன் முறையிற் கண்டு கொள்க. ஒன்பதின் மீதியில் 9-உம், 0-உம் ஒன்றிற்கொன்று சமமென்பதையும், ஒன்பதின் மீதியை ஒற்றையெண்ணாக் குறைக்க வேண்டுமென்பதையும் மறக்க வேண்டா.

முன்தொடரிலுள்ள முதல் எடுத்துக் காட்டை யெடுத்துக் கொண்டு, அதிலுள்ள வரிசைகள் ஒவ்வொன்றிற்கும் சரிபார்ப்பெண் காண்க.

	7	6	9	8
	6′	7′	3′	7′
	1	0	0	4
	9′	4	7	8′
	8	8′	7′	5
				3′
		2	0	3
			9′	4
	1	5	6	7′
	9′	8′	4′	6′
	6′	4′	0	1
சுருக்கக் கூடுதல் :	3	0	1	1
குறிக் கூடுதல் :	4	4	4	5
கூடுதல் : 5	1	9	0	6

சரி பார்ப்பு :

ஒன்பதின் மீதிகள் :	2	8	0	2

இரண்டாம் படி:- இங்குச் செயலட்டவணையைச் சரிபார்க்கின்றோம். செயலட்டவணையில் சுருக்கக் கூடுதலும் குறிக் கூடுதலு மடங்கும். ஏதேனும் ஒரு வரிசையின் குறியெண்ணை எடுத்துக் கொள்க. அதனை இரட்டிக்க. பின்னர் அவ்வாறு இரட்டித்த எண்ணையும் அதே வரிசைக்குரிய சுருக்கக் கூட்டெண்ணையும் கூட்டி, அதன் ஒன்பதின் மீதி அல்லது குறையெண் கண்டுகொள்க. இந்தக் குறையெண்ணே செயலட்டவணையில் அந்த வரிசைக்கான சரிபார்ப்பெண். இந்தப் படியில் ஒவ்வொரு வரிசைக்கும் நாம் கணக்கிடும் சரிபார்ப்பெண், தனித்தனியே முந்திய படியிற் கிடைத்த அதே வரிசைக்கான சரிபார்ப்பெண்ணோடு உடன்பட வேண்டும். எந்த வரிசைக்கான சரிபார்ப்பெண்களில் உடன்பாடில்லையோ, அந்த வரிசையெண்கள் தவறுகக் கூட்டப்பட்டிருக்கின்றன.

மேலுள்ள எடுத்துக் காட்டின் செயலட்டவணக்கான சரிபார்ப்பெண்கள் காண :

சுருக்கக் கூடுதல் :	3	0	1	1
குறிக் கூடுதல் :	4	4	4	5
இரட்டிக்கும் குறிக் கூடுதல் :	4	4	4	5
கூட்ட :	11	8	9	11
குறையெண்ணுக்க :	2	8	0	2

[ஒன்பதின் மீதியில் 9 = 0]

இக் குறையெண்களையும் முந்திய படியிற் கிடைத்த குறையெண்களையும் இனமாக ஒத்துப் பார்க்க. அந்தப் படியில் வந்தவையும் முறையே 2, 8, 0, 2-தாம். இவ் வெண்கள் இனமாக வுடன்படலின், கூட்டல் சரியென அறிக.

மாறாக, முதற்படிக்கான சரிபார்ப்பெண்கள் 2, 8, 0, 2 எனவும், இரண்டாம் படிக்கானவை முறையே 2, 6, 0, 2 எனவும் இருக்கின்றதெனக்கொள்க. இங்கு நூற்றிட வரிசைக்கான சரிபார்ப்பெண்கள் ஒன்றுடனொன்று மாறுபட்டு நிற்கின்றன. அந்த வரிசை தவறாகக் கூட்டப்பட்டிருக்கின்றது என்பதே இதன் பொருளாம். எனவே, ஏனையவற்றை விட்டுவிட்டு, அந்த வரிசையை மட்டும் மீண்டுங் கூட்டித் தவற்றைக் களையலாம். [தொடரும்]

ஈழத்தடிகளுக்கு நன்கொடை

[சென்ற இதழ்த் தொடர்ச்சி] தொகை

37.	திரு குணசேகர், பி.ஏ.பி.டி.எல்.எல்.பி, கோவை		5—00
38.	,, வெற்றிவேந்தன்	,,	5—00
39.	,, சதாசிவம்	,,	5—00
40.	,, வாசுதேவன்		5—00
41.	,, இராமதுரை		5—00
42.	,, இரமேசுகுமார்		5—00
43.	,, வி. சாம்பசிவம், வடபாதி மங்கலம்		100—00
44.	,, வ. இறையொளி, நெய்வேலி, உ. த. க. சார்பில்		25—00
45.	,, துரை. சம்பத்குமார், ஈரோடு		5—00
46.	,, மறைமலையடிகள் தமிழ் நெறி மன்றம், அவிநாசி		4—00
47.	,, மறைமலையடிகள் கணிய நிலையம், அவிநாசி		1—00
48.	,, க. அன்புச்செழியன், ஆட்டையாம் பாளையம்		5—00

'தென்மொழி'க்கு நன்கொடை.

20-10-70 முதல் 4-1-71 முடிய தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத் தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

	உருபா
திருவாளன்மார். பெ. புதுமைப்பிரியன், பெ. செல்லையா, பெ. அரசு, சின்னத்தம்பி	100—00
திரு. எம். செயசீலன், திருவனந்தபுரம்	2—00
திரு. ப. சுப்பிரமணியன், சேவூர்	5—00
திரு. வீர. செல்லக்கண்ணு, கோவை-2	2—95
திரு ந. தேவராசன், இராணிப்பேட்டை	1—00
திரு. வ. ம. நடராசன், வெள்ளோட்டாம் பரப்பு	2—50
திரு. சின்னத்துரை, நெய்வேலி	1—00
திரு. தமிழ்மணி, நெய்வேலி	5—00
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி	4—00
திரு. உ.ச. எழில், வாள்வாங்கி	1—00
புலவர் திரு. தன்னொளியன், கண்ணமங்கலம்	1—00
திரு. சீர்த்தொண்டன், மயிலை	5—00
புலவர் திரு. சா. அடல்எழிலன், திருவையாறு	1—00
திரு. அ. தங்கராசன், நயினார்கோவில்	6—00
கல்லை திரு. பெருஞ்சித்திரன், கல்லுப்பட்டி	30—00
பெங்களூர் அன்பர்கள் (திரு. அறவாழி வழி)	16—00
திரு. பி. திருநாவுக்கரசு, பெங்களூர்-21	5—00
திருவாளன்மார். பெ. புதுமைப்பிரியன், பெ. செல்லையா, பெ. அரசு, சின்னத்தம்பி	100—00
திரு. நாரா. மகிழ்நன், திருச்சி-14	25—00
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி	4—00
திரு. வை. பூ. சோமசுந்தரம், கழுகுமலை	1—00
திரு. அ. இளங்கோ, செக்க சமுத்திரம்	1—00
திரு. கே. பாண்டியன், புதுதில்லி-10	2—00
திரு. சி. கணேசன், திருத்தணி	5—00
திரு. அரு. இராமசாமி	1—50
திரு. பெ. க. வெற்றிக்கூத்தன், திருச்சி	101—00
திருவாளன்மார். பெ. புதுமைப்பிரியன், பெ. செல்லையா, பெ. அரசு, சின்னத்தம்பி [தொடரும்]	100—00

செ. சொ. பி. பேரகரமுதலி

உருவாக்க, வெளியீட்டுத் திட்டம்.

உறுப்பினர் பட்டியல்

திருவாளர்கள்:-- 1. தாமரை பெருஞ்சித்திரன், கடலூர்-1. 2. மா. பூங்குன்றன், கடலூர்-1. 3. புலவர் இறைக்குருவன். மதுரை-10. 4. இறை. பொற்கொடி, மதுரை-10. 5. காளியப்பன், (நாராயணன்) நெய்வேலி-1. 6. செ. பன்னீர்ச்செல்வம், சென்னை-2. 7, த. வளங்கோ, புதுவை-1. 8. செ. சித்தார்த்தன், அறி. இ. (பி.எசி.) சென்னை-25. 9. கி. மகிழ்கோ, புதுவை-5. 10. திருநாவுக்கரசு, பொ. இ. வேலூர்-9

11. புலவர் சா. அடல் எழிலன், திருவையாறு. 12. ந. முத்துக் குமரன், அறி. இ. ஆ. ப. குளத்துப்பாளையம். 13. திருச்சி மாவட்டத்தான், 14. ந. செங்குட்டுவன், திருச்சி-14. 15. அருண்மொழியன், திருச்சி-14. 16. பொற்செழியன், (வே.நா. இரேணுகோபால்,) பெங்களூர்-1. 18. உணர்வுப்பித்தன், (ஆ. சொக்கலிங்கம்) திருச்சி-10 18. உளங்கவரழகன், இராசிபுரம். 19. நாவை-சிவன். (தமிழ்மகன்) கீரனூர். 20. ச. கலியமூர்த்தி, காவேரிநகர்.

21. .... 22. சி. பூ. மணி, பெங்களூர்-21. 23. க. அப்பாத்துரை நடுப்பட்டி. 24. ச. சின்னத்துரை, நெய்வேலி-1. 25. அனபுவாணன, (த. கோவிந்தன்) நெய்வேலி-1 26 அ. அருள்நெறி, நெய்வேலி-2. 27 ஆ. கருப்பையா, நெய்வேலி-3. 28. இரா. அப்பாவு, நெய்வேலி-3. 29. இரா. பெருந்தேவன், நெய்வேலி-2. 30. மு. அறவாழி, நெய்வேலி-1.

31. பொன்-தமிழ்மாறன் (இராமசாமி), நெய்வேலி-1. 32. தமிழநம்பி, அறங்கண்டநல்லூர். 33. புலவர் பா. வீரப்பன், ஆனைமலை, 34. நா. இளமாறன், பெரும்பகல்லாக்குடியிருப்பு, 35 க. மலர்ச்செல்வன், (தமிழ்ராசன்) மதுரை-1. 36. பா. பொ. இளங்கோ, உக்காம. 37. செ. பெரிய நாடார், தெற்குச்சூரன்குடி. 38. சே. கு. அரசங்கோவன் மேட்டூர் அணை-1. 39. ஞா. தாமசு, மணிமுத்தாறு. 40. கே. பூபதி, பெங்களூர்-16.

41. துரை. சம்பத்குமார், க. இ. ஈரோடு-1. 42. அறவாழி, தளவாய்ப்பட்டணம். 43. இல. க. இரத்தினவேல், திருச்சிராப்பள்ளி-1. 44. சு திருஞானம், திருச்சிராப்பள்ளி-1. 45. ஆப்பூர் கே. ஏ. மணவாளன், பெங்களூர்-5. 46. இர. பரணன், பரணம். 47. மு. வ. பரமசிவம், நடுப்பட்டி. 48. .... 49. மு. திருநாவுக்கரசு, அண்ணாமலைநகர். 50. க. இராமசாமி, கோவில்பட்டி.

51. ஓ. பிச்சை, தெற்குத்தெரு, மேலூர். 52. இல. வேலரங்கன், சோமையனூர். 53 கெம்பீரம், பெங்களூர-1. 54. செ பெருமாள், கடத்தூர். 55. புலவர் வ. அரிஅரன், ஒண்டிப்புதூர். 56. ந. தேவராசன், வேலூர்-1. 57. க. செகநாதன், பி.எசி. ஈரோடு. 58 இராசமாணிக்கம், காரைக்குறிச்சிப்புதூர். 59. வெ. கிழார், பெங்களூர்-21. 60. சா. பொழிலன், நெய்வேலி-2.

61. கா.சே. சாத்தப்பிள்ளை, பி. எசி. பி. டி. ஆமூர். 62. புலவர். கா. இளமுருகன், புன்செய்ப்புளியம்பட்டி. 63. ப கு. முருகவேள், புன்செய்ப்புளியம்பட்டி. 64. புலவர் நா. அருணன், எரங்காட்டுப்பாளையம். 65 பா. அறவாழி, சென்னை-7; 66 அ. வெள்ளிமலையார், திருச்சிராப்பள்ளி-8; 67 சாலை. இளந்திரையன், எம.ஏ. எம். லிட், புதிய தில்லி-5. 68 .... 69. மூல்லைவாணன், சிங்கை; 70 ந. இராசகோபாலன், தஞ்சாவூர்–1.

71 அகத்தி கிருட்டிணன், இ. அ. (வேளாண்) சோளிங்கபுரம். 72 ஏ. கே. மணி, பி. இ, ஏ. எசு. எசு–1. பெங்களூர் 28 74 வே. ஐயனப்பிள்ளை, வேம்பனூர்; 74 வ. கௌரிநாதன், திருச்சி-14 75 எழிலரசன், திருச்சி-14 76 பொன்- தங்கவேலன், பெங்களூர்-15 77 தி. எழிலரசன், (இரமணி, மதுரை-3) 78 பொன்-மாறன், (இராமகிருட்டிணன்), மதுரை-3. 79 மறை-நித்தலின்பன், கோவை 80 தமிழ்க்கூத்தன், கருந்திட்டைக்குடி.

81 புலவர் ச. தமிழ்வேலன், மீனாட்சிபுரம். 82 அ. இளங்கோ பி. எசி. பி. டி. பெருமாம்பாளையம் 83 புலவர். த. மாணிக்கம், கூகலூர் 84 புலவர் திரு. மாரி. விசுவநாதன், வால்பாறை 85 பா. வளன்அரசு, க. மு. திருநெல்வேலி-2 86 கரு. பேச்சிமுத்து, திருச்சி 14 87 அ. சாமிக்கண்ணு, அரூர் 88 கே. அரசு பெங்களூர்-21, 89 ந. சுப்பையா, அருமடல்; 90 த. சுப்பிரமணியன், செட்டிக்குளம்.

91 த. வையாபுரி, ஆனைமலை; 92 எசு. கே. எசு. காதர், அம்பாலா; 93 இர. சு. கிருட்டிணன், கீழ்த்தென்குலம்; 94 அ. மீ. இராமமூர்த்தி, திருவாரூர். 95. வை. வேதையன். திருவாரூர். 96. த. சரவணத்தமிழன், திருவாரூர். 97. மா. இறைவன், திருச்சி-14. 98. த. அன்பழகன், கடலூர-1. 99. பெருஞ்சித்திரன், கெ. கல்லுப்பட்டி. 100. பெ. அன்னகாமு, கெ. கல்லுப்பட்டி.

101 க நாராயணன், பெருகும்பகல்லாக் குடியிருப்பு; 102 வி. இராசமாணிக்கம், எம்.ஏ. கோயமுத்தூர் 18; 103 மு. கதிரவன் நெமலி; 104 .... 105 துரை–தெட்சிணமூர்த்தி, மேலச்செம்மங்குடி; 106 க. சிவானந்தம் திருமலைராயன்பட்டினம்.

107 அரங்க-திருமாறன், புதூர், உரத்தநாடு; 108 க. அன்புமணி, திருச்சி 15; 109 கரி. நடவரசன், நெய்வேலி 3; 110 இரா. தமிழன்பன், வேப்பங்குறிச்சி.

111 ப. துரையரசன், கைகாட்டிப்புதூர்; 112 கோ. நிலவழகன், க. மு. சென்னை 30; 113 க. சி. அகமுடைநம்பி, பி. இ, மதுரை; 114 சு. வலங்கைப்பாண்டியன் மதுரை; 115 சி. குமாரசாமி, எல். எம். இ., மதுரை 116 பொன்-இராமானுசம், சுத்தமல்லி; 117 நெல்லை சு. மணியன், திருச்சி 2; 118 முத்து-செல்வன், அலசூர்; 119 ஆ. ப. தொல்காப்பியன், மொ. ஆலமரத்துப்பட்டி; 120 இரா. தங்கராசன், மாரம்பாடி.

122 ப. பெரியசாமி, விருதுநகர்; 122 பழங்கரைவேள். பழங்கரை; 123 30-ஆம் அணி இந்திய வான்படைத்தமிழன்பர்கள், 124 உ.த.க. பெங்களூர் நகரக்கிளை; 125 செ. தென்னவன், கவுண்டன் பாளையம்; 126 காரை-இறையடியான், காரைக்கால்; 127 .... 128 தே. நே. சித்திரச்செல்வி, ஆரூர் 129 புலவர் இ. தேவநேயச்சித்திரன், கீ. அ. செங்கழுநீர்ப்பட்டு. 130 வே. மு. பொதியவெற்பன், செங்கழுநீர்ப்பட்டு.

131 ந. அரணமுறுவல், கீ. அ. நாயனூர்பாளையம். 132 த. முத்துக்குமரன், க. இ. பாம்பூர்; 133 ஆர். வேணுகோபால், புதுவை-1; 134 இரா. செயராமன், நெய்வேலி 2 135 திருவாட்டி வேளாங்கண்ணி உரோசுமரி, தி. அத்திப்பாக்கம்; 136 தி. ஆ. சண்முகசுந்தரம், திருச்சி 1; 137 மு. இளம்பரிதி, உரத்தநாடு; 138 ப. இளம்வழுதி, உரத்தநாடு. 139 ந. இளமுருகன் அறி. இ. ஆ. ப நீடாமங்கலம்; 140 பி. என். அப்பாசி கவுண்டர், காளிங்கராயன்புதூர்.

141 சிங்கை-செங்கோடன், அம்மாப்பேட்டை, தஞ்சை; 142 இரா. தமிழ்வாணன், நாயனூர்பாளையம்; 143 அ. தங்கராசன், ஈப்போ, மலேசியா; 144 கு. அண்டிரன், நாயனூர்பாளையம் [தெ. ஆ] 145 ப. தாயம்மாள் அறவாணன், சென்னை 29; 146 ச. பாண்டியன், ஈப்போ, மலேசியா; 147 பெ. புதுமைப்பிரியன், மலாக்கா; 148 .... 149 இரா. வெற்றியரசு, நெய்வேலி1; 150 ப. நன்முல்லை, சிங்கை.

151 இரா.அருட்குவை, நெய்வேலி 3; 152 திருமலை. குமணன், சிங்கை; 153 இ. எசு. சி. மூர்த்தி, பெங்களூர் 16; 154 துரை அருண்மொழி, நெய்வேலி 1; 155 செ. மேதலைவன், நெய்வேலி 3 156 த. செகந்நாதன், அம்பலாப்பட்டைவீடு; 157 இறைவாண

நிலா, சிங்கப்பூர்; 158 ப. தண்டபானி, கான்பூர்; 159 சே. கணபதி, மலேசியா; 160 புலவர்-குமர. தன்ஞெரியன், கண்ணமங்கலம், (வட ஆ. மாவட்டம்)

151 ஏ. செல்வராசு, கான்பூர் 8; 162 செந்தமிழ்ச்சேய், பொறி இ. அரசூர், தெ. ஆ. மாவட்டம்; 163. உடுமலைப்பேட்டை அன்பர்கள் அமைப்பாளர் கி. சீதாராமகுப்தா; 164. ம. துரைசாமி, பீடோங்-மலேசியா; 165 எம். ஏ. இளஞ்செல்வன், (எம். இராமு) பீடோங்-மலேசியா; 166 பெ.அரசு, மலாக்கா; 167 இரா. காளிமுத்து கோலாலம்பூர்; 168 மருத்துவர் சி. இராமச்சந்திரன், சேலம்; 169 பி. இலக்குவன், குவைத்து; 170 புலவர் கா. சு. சண்முகம், பல்லடம்.

171 புலவர் ப. சுப்பையன், நாச்சிப்பாளையம், திருப்பூர்; 172 புலவர் திருமேனி, நாகராசன் காரைக்கால்; 173 காரை-அறவாழி, காரைக்கால்; 174 மு. துரைச்சாமி, க. மா. அ. சுலுத்தான்பேட்டை, பல்லடம்; 175 க. தமிழப்பன், அ. அரங்கசாமி, திருப்பூர் 2; 176 சி. அறிவுறுவோன், அம்மையகரம்; 177 திருவாட்டி இராசேசுவரி செந்தில், அம்பாலா; 178 கல்லூர் மணியம். மலாக்கா, 179 பறம்பை. தென்னவன், பறம்புக்குடி. 180 பொ. பொன்னரசன், க. இ. மேலூர்.

181 அர. இராசேந்திரன், க. இ. குளத்துப்பாளையம். பல்லடம் 182 அதியமான், சா. முருகு, ஆசிரியர், அதியமான்குப்பம், திருமுதுகுன்றம். 183 மூ. பொய்யாமொழி, காட்டுக்கூடலூர். தெ. ஆ) 184 துரை-வேழவேந்தன், காட்டுக்கூடலூர். (தெ ஆ) 185 சி. இராசாங்கம், அறி. இளை. தஞ்சாவூர். 186 கு. பெருந்துரை, அதியமான்குப்பம. திருமுதுகுன்றம். 187 பொன். பகலவன், நெய்வேலி 3; 188 கோ. கண்ணன், நெய்வேலி 3; 189 பொன்-தமிழ்முல்லை, சிங்கப்பூர்-2; 190. சேதுகா-முத்துக்குமரன். பல்லடம்.

191 பா. சு. மணியன், சில்லாங்கு-9; 192 கோ. சாந்தலிங்கம், சில்லாங்கு-9; 193 வி. இராமாநுசம், பொறி. இ. நெய்வேலி-1, 194 இரா. ஆறுமுகன், பு புளியம்பட்டி; 195 மா. கவிச்செல்ல நடராசன், C/o 56. A. P. O; 196 இரா. விசுவநாதன், க. இ. (வணிகம்) தஞ்சாவூர். 197. அன்பு. ந. வை. இளஞ்செழியன், அம்மையன்பட்டி. [தஞ்சை] 198. புலவர் ஒ அரசு, குன்றூர்-2. 199. மு. குமாரசாமி, க. மு. மேலூர்; 200. ந. வெ. பெருமாள். அறி.இ புதுவை-1; 201 புலவர் தோ. கமலநாதன், வேலூர்-6; 202 இரா.ப. நிறையின்பன், அறி.இ. போடி-மீனாட்சிபுரம்; 203 சிங்கை-மா இளங்கண்ணன், சிங்கப்பூர்-12.